கோகுலம்

GOKULAM ஜனவரி 2000 ரூ. 6/-




சுழல் கோப்பை யாருக்கு?



ஐந்து கப்பல்களுக்கு அதிபதிகள்! இப்படி தெருவில் உட்காரலாமா?

"ரகு, உன் நோட்டுல யாரு காய்கறி கணக்குப் போட்டு வரச் சொன்னது?"
"நீங்கதானே சார் வீட்டுக் கணக்கை விவரமா போட்டு வரச் சொன்னீங்க!"

– தளவை நாராயணசாமி.




ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





எங்கே, தவறைச் சுட்டிக் காட்டுங்கள் பார்க்கலாம்?



விடை : 1. சேவலுக்குக் கொண்டை இல்லை, 2. வாத்திற்கு கால் நீளம், 3. மயிலின் கண்.

விடை : 1. பிள்ளையார் தந்தம், 2. பாம்பு, 3. எலியின் வால், 4. லட்டு, 5. ஊதுபத்தியின் புகை, 6. பூக்கள், 7. தேங்காய்.



கோகுலம்

2000

ஜனவரி

மலர் : 17

இதழ் : 12


அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

கி.பி. இரண்டாயிரமாவது ஆண்டினை வரவேற்று வாழ்த்துவதற்குத் தயாராக இருப்பீர்கள். இந்த இரண்டாயிரமாவது ஆண்டுடன் இருபதாம் நூற்றாண்டை வழியனுப்பி வைக்கிறோம்.

ஒரு நூற்றாண்டின் முடிவையும் மற்றொரு நூற்றாண்டின் தொடக்கத்தையும் காண்பது என்பது ஒரு விசேஷமான அனுபவம்தான். வேறு பல ஜனவரி முதல் தேதிகளை விட வரப் போகிற முதல் தேதி ஒரு அலாதியான கிளுகிளுப்பை ஏற்படுத்தத்தான் செய்யும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எத்தனையோ பல விஞ்ஞான ரீதியான முன்னேற்றங்களைக் கண்டு, மனித வரலாற்றில் மகத்தான மாற்றங்களை உருவாக்கியது. ஆனால் இந்த முன்னேற்றங்கள் பலவும் கூடவே சில பின்னடைவுகளையும் துன்பங்களையும் ஏற்படுத்தின.

அணைகள் கட்டக் காடுகளை அழித்தார்கள்; மழை பொய்த்தது. பயிர் பாழாகாதிருக்க பூச்சிக் கொல்லிகளைத் தயாரித்தார்கள்; விஷ வாயு பரவி மனிதர்களையும் பாதித்தது. அணுசக்தியை உருவாக்கினார்கள்; அணுக்கதிர் கசிவு பேராபத்தாக உள்ளது; அணுகுண்டோ உலகையே அச்சுறுத்துகிறது. கம்ப்யூட்டர்களை மனித குலத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கருதலாம்; ஆனால் அதிலும் Y2k சிக்கல் உள்ளது. இன்டர்நெட், அறிவுக்குத் தீனி போடுவதோடு நிற்கிறதா? தவறாகப் பயன்படுத்தப்படும் போது அழிவுக்கும் காரணமாகிறது. டீவி கண்டுபிடித்தார்கள். மனிதன் டீவிக்கு அடிமையாவதிலிருந்து அவனை எப்படி மீட்பது என்று திணறுகிறார்கள். சிகரெட் ஒரு நாகரிகச் சின்னம் என்ற நிலை மாறி, புற்றுநோயின் பிறப்பிடம் என்று உணரப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் தயாரிப்பு மாபெரும் சாதனை என்று எண்ணப்பட்டது; இப்போது அதே பிளாஸ்டிக் சுற்றுச் சூழலைப் பாழடித்துக் கொண்டிருக்கிறது. விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ராக்கெட்டுகளோ அவற்றின் பணி முடிந்த பிறகு விண்வெளியையே குப்பைமேடாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன! இன்னும் நிறையச் சொல்லலாம்.



இருபதாம் நூற்றாண்டின் முன்னேற்றங்கள் இருபத்தோராம் நூற்றாண்டில் நமக்கு ஊக்கமளிப்பதுடன் எச்சரிக்கையாகவும் அமைதல் வேண்டும். எந்த முன்னேற்றமும் இயற்கைக்கு இசைவாக இருக்க வேண்டும்; இயல்பான வாழ்க்கைக்கு இடையூறு பண்ணாமல் இருக்க வேண்டும்.

இவ்வுலகின் எதிர்காலப் பிரஜைகளான நீங்கள் இதை நினைவில் வையுங்கள். எந்த ஒரு விஞ்ஞான முன்னேற்றத்தையும் நீங்கள்தான் அடக்கி ஆளவேண்டுமே தவிர, அந்த முன்னேற்றம் உங்களை ஆள்வதற்கு அனுமதித்து விடக் கூடாது!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

கோகுலம்

ஜனவரி 2000



இந்த இதழில்...

புத்தாண்டு வரவேற்பு பலவிதம்!

டயரி

ஆங்கிலப் புத்தாண்டு பிறந்தால் போதும். எல்லோருமே டயரி, காலண்டர் வேட்டையில் இறங்கி விடுகிறார்கள். இந்த டயரி முதன் முதல் வெளிவந்தது 1816-ம் ஆண்டில்தான். வடிவமைத்தவர் லண்டனில் ஸ்டேஷனரி சாமான்களை விற்பனை செய்து வந்த ஜான் லெட்ஸ் என்பவர்.

புத்தாண்டு வரவேற்பு

லண்டனில் டிரபால்கர் சதுக்கத்தில் பொதுமக்கள் டிசம்பர் 31 நள்ளிரவில் கூடி நின்று புத்தாண்டை வரவேற்பார்கள். நியூயார்க்கில் இதே போல் டைம்ஸ் சதுக்கத்தில் பொது மக்கள் ஒன்று சேர்ந்து புத்தாண்டை வரவேற்பார்கள்.

வட ஆப்பிரிக்க நாடுகளில் புத்தாண்டு தினத்தன்று மக்கள் தீ மூட்டி அதைத் தாண்டிச் செல்வார்கள். அப்படித் தாண்டும் போது அவர்களின் தவறுகள் பாவங்கள் முதலியன நீங்கி சுத்த ஜீவியாக்கப்படுவதாக







நம்புகின்றனர்.

'குங் ஹை பய சாய்' என்றால் சீன மொழியில் புத்தாண்டு வாழ்த்துகள் என்று அர்த்தம்.

1752-ம் வருடத்திலிருந்துதான் ஜனவரி 1-ந் தேதியை வருடத்தின் ஆரம்ப நாளாக ஏற்கும் வழக்கம் ஏற்பட்டது.

லீப் வருடம்

லீப் வருடம் அறிமுகப்படுத்தப்பட்டது ஜூலியஸ் சீசரால்தான். இன்றைய ஆங்கிலேயக் காலண்டரை அவர் கி.மு. 45ல் உருவாக்கினார்.





பழங்கால ரோம் நாட்டில் மக்கள் தங்கள் வீடுகளில் காலண்டர் மாட்டி வைப்பதில்லை. ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் ஊர்ப் பணியாளர் ஒருவன் வந்து ரோம் மொழியில் புதுமாத பிறப்பைச் சொல்லிச் செல்வான்.

இஸ்ரேல் நாட்டின் புத்தாண்டு செப்டெம்பர் மாதம் தொடங்குகிறது. இவர்களின் 12 மாதப் பெயர்களில் ஒன்று ஐயர் மற்றது சிவன்.

ஆதாரம் : தெரிந்த செய்திகள் தெரியாத விவரங்கள்

— ஆறுபாதி புகழேந்தி





• சித்து

ஓய்வு

'சிக்ஸர் சித்து' என்று கிரிக்கெட் ரசிகர்களால் அழைக்கப்பட்ட நவஜோத்சிங் சித்து கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்.

மே மாதம் நடந்த உலகக் கோப்பைக்குப் பின் சித்து எந்த ஆட்டத்திலும் பங்கேற்கவில்லை.

1983ஆம் ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டங்களில் முதல் முறையாக ஆடத் துவங்கினார் சித்து. இதுவரை 51 டெஸ்ட் போட்டிகளிலும் 136 ஒரு தினப் போட்டிகளிலும் விளையாடி இருக்கிறார்.

டெஸ்ட் போட்டியில் அதிகபட்சமாக 201 ரன்களை எடுத்திருக்கிறார். இதுவரை டெஸ்ட் போட்டியில் மட்டும் ஒன்பது சதங்களையும் பதினைந்து அரை சதங்களையும் குவித்திருக்கிறார். ஒரு தினப் போட்டியில் இவர் எடுத்த மொத்த ரன்கள் 4415. இங்கிலாந்துக்கு எதிரான ஒரு தினப் போட்டியில் 134 ரன்களை அடித்ததே இவர் ஒரு தினப் போட்டியில் எடுத்த அதிகபட்ச ரன்களாகும்.

செஸ் ராணி

விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு செஸ் உலகில் இன்று அதிக பரபரப்பாகப் பேசப்படும் பெயர் ஆர்த்தி. 18 வயதிற்குட்பட்ட உலக இளைஞர் செஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. சென்னை வைஷ்ணவா கல்லூரியில் பி.பி.ஏ. படிக்கும் ஆர்த்தி இதில் கலந்து கொண்டு உலக சாம்பியன் பட்டத்தை வென்று நம் நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.




• ஆர்த்தி

ஆர்த்திக்கு செஸ் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாயிருந்தவர் அவர் அண்ணன் ராஜாதான்! அண்ணன் விளையாடுவதைக் கவனித்த அனுபவத்தைக் கொண்டு எட்டு வயதிலேயே போட்டிக்குப் பெயர் கொடுத்து விட்டார் ஆர்த்தி. பிறகு அண்ணனிடம் நான்கு நாள் பயிற்சி பெற்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நடத்திய அந்த செஸ் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறார்!

இதன் பிறகு பெற்றோர்கள் ஊக்கப்படுத்த ஆர்வத்துடன் செஸ் ஆட்டத்தை முழுவதுமாகக் கற்றுக் கொண்டு நிறைய போட்டிகளில் விளையாடி பரிசுகளைக் குவித்திருக்கிறார்.

செஸ் உலகில் மேலும் பல சாதனைகளைப் படைக்க ஆர்த்தியை வாழ்த்துவோம்!

எங்கள் ஊருக்கு வாருங்கள்!




'**மா**னாமதுரை' என்ற ஊரின் பெயர் உங்களுக்கு சில சினிமா பாடல்களின் மூலம் அறிமுகமாகியிருக்கும். சிவகங்கை மாவட்டத்திலுள்ள பெரிய ஊர்களில் ஒன்று இந்த மானாமதுரை. இதுதான் எங்கள் ஊர்.

இந்த ஊர் பெரிய நகரமும் அல்ல; சிறிய கிராமமும் அல்ல. இராமநாதபுரம், ராமேஸ்வரம் போன்ற ஊர்களுக்கு எங்கள் ஊரின் வழியாகத்தான் செல்ல வேண்டும். மதுரையிலிருந்து ஒரு மணி நேரத்தில் எங்கள் ஊரை அடைந்து விடலாம்.

ஊரின் நடுவே வைகை ஆறு ஒடுகிறது. ஆறு ஒடுகிறது என்றவுடன் வருஷமெல்லாம் கரை புரண்டு ஒடும் எனக் கற்பனை செய்து விடாதீர்கள். மழைக் காலங்களிலும் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும்போதும்தான் வைகையில் நீரைப் பார்க்கலாம்! மற்ற நாட்களில் சிறுவர்களுக்கு விளையாடும் மைதானமாகவும் வீடு கட்டுபவர்களுக்கு இலவசமாக மணல் சுரண்டும் இடமாகவும் பயன்படுகிறது.

ஆற்றின் இரு கரைகளிலும் மக்கள் வசிக்கும் பகுதிகள் உள்ளன. பள்ளி, கல்லூரி, தொழிற்சாலைகள் எல்லாம் உள்ளன.

எங்கள் ஊரை இரண்டு விஷயங்கள்தான் பலரையும் அறியச் செய்துள்ளது. முதல் விஷயம் மண்பாண்டம் செய்தல். இசைக் கருவியான கடம் முதல் எளியவர்களுக்கான குளிர் சாதனப் (மண்பாண்டத்தால் ஆனது) பெட்டிவரை இங்கு செய்யப்படுகிறது. இந்த மண்பாண்டங்கள் நம் நாட்டில் மும்பை, கல்கத்தா, டெல்லி, சென்னை போன்ற இடங்களுக்கும் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை என பிற நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது.



இரண்டாவது விஷயம் வருடம்தோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழா. ஆனந்தவள்ளி அம்மன் கோவிலில் நடைபெறும் இத்திருவிழா தொடர்ந்து பத்து நாட்கள் நீடிக்கும். ஒவ்வொரு நாளும் ஊரின் முக்கியஸ்தர்களில் ஒருவர் சுவாமி அலங்காரத்தையும் நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி, பட்டிமன்றம் என ஏதாவது ஒன்றையும் வழங்குவார்கள். திருவிழா நாட்களில் ஊரே கலகலவென்று இருக்கும். சுற்றியுள்ள கிராமத்து மக்கள் வந்து கூடுவார்கள். வைகை ஆற்றில் மக்கள் வெள்ளம் கரை புரண்டு ஓடும்.

மதுரையைப் போன்றே இங்கும் அழகர் ஆற்றில் இறங்குவார். திருவிழாவின் கடைசி நாள் பௌர்ணமி அன்று ஆற்றில் அமர்ந்து சாப்பிடும் நிகழ்ச்சி (நிலாச் சோறு) நடைபெறும். மானாமதுரை மக்களும் சுற்றியுள்ள கிராமத்து மக்களும் விதவிதமான உணவுகளைச் செய்துகொண்டு ஆற்றிற்கு வருவர். இரவு நேரத்தில் பௌர்ணமி வெளிச்சத்தில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உணவு பரிமாறி மகிழ்வோம். திருவிழா கோடை விடுமுறையில் வருவதால் எல்லோர் வீட்டிலும் உறவினர்களின் கூட்டம் வழியும்.

குட்டி மெரினாவைப் பார்க்க, மண்பாண்டங்களை வாங்க ஒருமுறை வரத் தோன்றுமே! வாருங்கள் மானாமதுரைக்கு.

– பொன் திருவரங்கன், ஆறாம் வகுப்பு, ஆர்.சி. நடுநிலைப்பள்ளி, மானாமதுரை.



கோகுலம்

கோப்பை யாருக்கு?

ஒவ்வொரு ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகமாக இடம் பெறுகிறதோ அப்பள்ளிக்கு கோகுலம் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டம் 1998ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. சென்ற ஆண்டு சுழல் கோப்பையைப் பெற்ற பள்ளி, வத்தலகுண்டு ஆண்கள் மேல் நிலைப் பள்ளி.

1999 ஆம் ஆண்டில் கோப்பையைக் கைப்பற்ற தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 35 பள்ளிகள் களத்தில் குதித்தன. இதில் பல பள்ளிகள் ஆரம்பம் முதல் இறுதி வரை மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டன.

இந்த ஆண்டு மத்தியில் லால்பேட்டையில் உள்ள இமாம் கஸ்ஸாலி பள்ளி, கோப்பையைக் கைப்பற்றக்கூடிய சாத்தியக் கூறு இருந்தது. ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவது இடத்தில் வந்து கொண்டிருக்கும் நபர் திடீரென கடைசியில் யாரும் எதிர் பார்க்கா வண்ணம் முதல் இடத்தைப் பெறுவதுண்டு. அதேபோல் இரண்டாம் இடத்தில் இருந்த ஆண்டிபட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி முந்திக் கொண்டு கோப்பையைக் கைப்பற்றி விட்டது.

மதுரையிலிருந்து ஒன்றரை மணிநேரப் பயணத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிபட்டியை அடைந்து விடலாம். போகும் வழியெங்கும் கண் கவர் பசுமை வயல்கள். மஞ்சளும் வெள்ளையுமாக செண்டு மல்லி மற்றும் மல்லிகைச் செடிகள். வாழை, கொய்யா மரங்கள். நீண்ட நெடிய மேற்குத் தொடர்ச்சி மலை. மலையின் ஓரத்தில் சிறிதும் பெரிதுமாய் ஊர்கள். இந்த ஊர்களிலேயே கொஞ்சம் பெரிய ஊர்



ஆண்டிபட்டி.

ஆண்டி பட்டியைச் சுற்றியுள்ள கிராமத்து மாண விகள் எல்லோரும் இந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்தான் படிக்கிறார்கள். இப் பள்ளியில் 1441 மாணவிகள் படிக்கின்றனர். எந்தப் போட்டியில் பங்கு பெற்றாலும் பரிசு வாங்காமல் திரும்ப மாட்டார்களாம் இப்பள்ளி மாணவிகள்!



தலைமை ஆசிரியை, திரு. கணேசன், திரு. மைதீன், திரு. சிவாஜி மற்றும் மாணவிகள்

கோகுலம் சுழல் கோப்பை பெற்ற செய்தி அறிந்ததிலிருந்து பள்ளி மாணவிகளும் ஆசிரியர்களும் உள்ளூர் பிரமுகர்களும் மற்ற பள்ளி ஆசிரியர்களும் மிகுந்த மகிழ்ச்சியிலிருந்திருக்கிறார்கள்.

எல்லா மாணவிகளும் ஒரே வளாகத்தில் படிக்கக் கூடிய வசதி கிடையாது. எனவே பதினோராம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் தலைமை ஆசிரியை அலுவலகம் ஒரு இடத்தில் செயல்படுகிறது. இங்கிருந்து ஐந்து நிமிட நடையில் அடைந்து விடும் தூரத்தில் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கான வகுப்புகள் உள்ளன. இன்னும் சற்று தூரத்தில் கம்ப்யூட்டர் மற்றும் ஆய்வுக்கூட வகுப்புகள் தனியாக இருக்கின்றன.

எனவே எல்லா மாணவிகளையும் ஒரே இடத்தில் வைத்து விழா நடத்த இயலாது என்று தலைமை ஆசிரியை அருள் ரோசரி கூறினார்.

அதனால் 6 முதல் 10 வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் சுழல் கோப்பையைப் பெறக் காரணமாயிருந்த மாணவிகளுக்கு மத்தியில் ஒரு விழாவும் நட





• தலைமை ஆசிரியை அருள் ரோசரி, சத்யா, ரெனிதா, சரண்யா, ப்ரியா, சுகன்யா, மாரியம்மாள், முத்துச்செல்வி, ரோகிணி, உமா மகேஸ்வரி, ராஜராஜேஸ்வரி, ஆர். சத்யா

ஊர் முக்கியஸ்தர் மத்தியில் ஒரு நிகழ்ச்சியும் நடத்த முடிவு செய்யப்பட்டது.

பள்ளியை அடைந்ததும் ஆசிரியைகளும் கோகுலம் வாசகிகளான மாணவிகளும் அன்போடு வரவேற்றார்கள். கோப்பையைக் கைப்பற்றிய பதினோரு மாணவிகளும் தங்கள் வியப்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த மாணவிகளில் ஒருவரான சரண்யா "லால்பேட்டை வரும்னு நினைச்சதும் நிறைய எழுதி அனுப்ப ஆரம்பிச்சோம். எங்கள் முயற்சி வீண்போகலை" என்றார். அதே போல் கோகுலத்தில் பங்கு பெற்ற மற்ற பள்ளிகளையும் மற்ற மாணவ, மாணவிகளின் படைப்புகளையும் மனம் விட்டுப் பாராட்டினார்கள்.

பிறகு தலைமை ஆசிரியை கோப்பையை வழங்க பதினோரு மாணவிகளும் பெற்றுக் கொண்டனர்.

மதியம் 2.30 மணிக்கு உள்ளூர் பிரமுகர்கள் கலந்து கொண்ட விழா தொடங்கியது. ஆண்டிபட்டி பேரூராட்சி தலைவர் வி.சிவாஜி தலைமை தாங்கினார். அவர் பேசும்போது "எங்கள் மாணவிகள் குடத்தில் இட்ட விளக்காக இல்லாமல் குன்றின் மேல் இட்ட விளக்காக விளங்குவது மிகவும் பெருமையாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.

''மாணவிகளின் சொந்த முயற்சியிலேயே இந்தக் கோப்பை பெறப்பட்டுள்ளது. ஆண்டு இறுதியில்தான் தலைமை ஆசிரியை விவரத்தை அறிந்து ஊக்குவித்தார்'' என்றார் வரவேற்புரை நிகழ்த்திய ஆசிரியர் எஸ். கணேசன்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கணேசன் மாணவிகளையும் ஆசிரியர்களையும் வாழ்த்திப் பேசினார்.

வாழ்த்துரை வழங்க வந்த ஆண்டிபட்டி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர் சிந்தா மதார் மைதீன் பேசும்போது ''இது ரொம்ப பெரிய விஷயம். இந்தச் செய்தியை அறிந்த எங்கள் மாணவர்கள் அடுத்து கோகுலத்தில் எழுத ஆரம்பித்து விடுவார்கள். நாங்களும் அடுத்த ஆண்டு கோப்பையைப் பெற முயற்சி செய்வோம்'' என்றார்.

பதினோரு மாணவிகளுக்கும் கோகுலம் சார்பாக புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

ஆசிரியை கே. விஜயலஷ்மி நன்றியுரையின்போது ''மாநில அளவில் கோப்பையைப் பெற்றது எங்கள் பள்ளிக்கு மட்டுமல்ல மாவட்டத்திற்கே பெருமை. இவ் விஷயத்தை நாளிதழ்களுக்கு அனுப்ப இருக்கிறோம்'' என்றார்.


கிளம்பும்போது "வத்தலகுண்டு பள்ளியைப் போல நாங்க கோப்பையை விட்டுக் கொடுத்துட மாட்டோம். பள்ளியில் நிறைய மாணவிகளை கோகுலத்தைப் படிக்க வைத்து படைப்புகளை அனுப்பி அடுத்த ஆண்டும் நாங்களே கைப்பற்றிக் கொள்வோம்'' என்றார்கள் மாணவிகள்.

அடுத்த ஆண்டும் அவர்கள் கோப்பையைக் கைப்பற்ற நீங்கள் விட்டு விடுவீர்களா? இப்போதே உங்கள் முயற்சியைத் துவக்கி விடுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

அட்டையில்: **சத்யா**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

கொழுக்கட்டைக்கு வால் உண்டா?

மாலதி



ஒரு ஏழைக் குடும்பம். அவர்களுக்கு ஏழு குழந்தைகள். பிள்ளையார் சதுர்த்தி வந்தது. அதிகாலை எழுந்து ஒன்பது கொழுக்கட்டைகள் செய்து பூஜை செய்தாள் அம்மா. நிவேதனம் செய்தபின் தானும், தன் புருஷனுமாய் ஆளுக்கொரு மோதகத்தைப் பிரசாதமாய் எடுத்துக்கொண்டு மற்ற ஏழையும் ஒரு கிண்ணத்தில் வைத்து மூடினாள்.

முதல் பெண் எழுந்து பல் தேய்த்து குளித்து விட்டு வந்தாள். "அம்மா! பூஜை முடிந்து விட்டதா? கொழுக்கட்டை செய்தாயா?" என்று கேட்டாள்.

"எல்லாம் ஆயிற்று. சமையலறையில் ஏழு கொழுக்கட்டைகள் வைத்திருக்கிறேன். ஒன்றை எடுத்துக் கொள். நன்றாக மூடி வை. இல்லையானால் எலிகள் தின்று விடும்" என்றாள் அம்மா.

அப்படியே செய்தாள் பெண்.

இரண்டாவது பையன் வந்தான். அவனும் ஒரு கொழுக்கட்டை சாப்பிட்டான். இப்படியே ஐந்து குழந்தைகளும் செய்தனர்.

ஆறாவது பெண் வந்தாள்.

அம்மா சொன்னபடி ஒரு கொழுக்கட்டை சாப்பிட்டாள். ரொம்ப ருசியாக இருந்தது. இன்னொன்றையும் சாப்பிட்டு விட்டாள். ஒரு சுண்டெலி ஓடியது. 'லபக்'கென்று பிடித்து கிண்ணத்தில் போட்டு மூடி விட்டுப் போய் விட்டாள்.

கடைக் குட்டியான ஏழாவது பெண்ணுக்கு நான்கு வயது. அவள் அதுவரை கொழுக்கட்டையைப் பார்த்ததே இல்லை. இந்த வருஷம் எப்படியாவது மோதகம் செய்தேயாக வேண்டும் என்று அவள் தான் அடம் பிடித்தாள்.

கொஞ்சமாக மூடியைத் திறந்தவள் குடுகுடுவென்று ஓடும் எலியைக் கண்டு திகைத்தாள். நன்றாக மூடி விட்டு அம்மாவிடம் ஓடி வந்தாள்.

"அம்மா, அம்மா! கொழுக்கட்டைக்கு கண் உண்டா? அது ஓடுமா? கறுப்பாக இருக்குமா? வால் இருக்குமா?" என்றெல்லாம் கேட்டாள்.

அம்மா 'இதென்னடா அதிசயம்' என்று சமையலறைக்கு வந்து மூடியைத் திறந்தவுடன் சுண்டெலி துள்ளிக் குதித்து குடுகுடுவென்று ஓடி மறைந்தது.

அம்மாவுக்கு ரொம்பக் கோபம் வந்தது. பாவம் சின்னக் குழந்தையை ஏமாற்றி விட்டார்களே என்று!

"யார் இரண்டு கொழுக்கட்டைகள் சாப்பிட்டது? அப்படிச் செய்வது பாவமில்லையா? நமக்கு மறுபடி கொழுக்கட்டை செய்ய வசதி கிடையாதே! பகிர்ந்துண்ணுகிற பழக்கம்தானே நல்லது" என்றெல்லாம் கேட்டுப் பார்த்தாள். எல்லோருமே "நான் இல்லை" என்றுதான் சொன்னார்கள். நயமாக கேட்டாயிற்று; மிரட்டிப் பார்த்தாயிற்று. ஊஹூம்! பலன் இல்லை!

"இதோ பாருங்கள்! புது டிரஸ் வாங்கித் தருவேன். உண்மையை ஒப்புக் கொண்டால்...!" என்றாள்.

ஆறாவது பெண் சற்று விபரமானவள். இன்னொரு தடவை கொழுக்கட்டையே செய்ய முடியாத அம்மா புதுத் துணி எடுத்துத் தருவதாவது! உண்மையைச் சொன்னால் உதைதான் விழும் என்று வாயை இறுக மூடிக் கொண்டிருந்தாள்.

கடைக்குட்டிக்குப் புது டிரஸ் என்றதும் சபலம். அவளிடம் புதுச்சட்டையே கிடையாது. எல்லாம் அக்காக்கள் போட்டுக் கொண்ட சாயம் போன, ஒட்டுப் போட்ட உடுப்புகள்!

மோதகம் போனால் போகிறது... கவுன் கிடைக்குமே என்று ஆசைப்பட்டாள்.


"அம்மா! நான்தான் எடுத்துத் தின்னுட்டு சுண்டெலியைப் பிடித்து வைத்தேன்" என்று பொய் சொன்னாள்.

அம்மாவுக்கு வந்ததே கோபம்!" உழக்கு மாதிரி இருந்துகொண்டு இத்தனை திரிசமன் செய்திருக்கிறாயே" என்று செம்மையாக மொத்தி விட்டாள்.

"வெளியே போய்த் தொலை! இனிமேல் உனக்கு வீட்டிலே இடம் கிடையாது" என்று வெளியே தள்ளி கதவையும் சார்த்தி விட்டாள்.

நிஜமாகவே அம்மா வீட்டை விட்டுத் துரத்தி விட்டதாக நினைத்த குழந்தை கால் போன போக்கில் நடந்தது.

ஒரு மாடு "குழந்தே! என் கன்றுக்குட்டியை அங்கே கட்டி இருக்காங்க... பாவம் பசியாலே கத்துகிறது. கொஞ்சம் அவிழ்த்து விடேன்'' என்றது. மாடு காட்டிய இடத்திலிருந்து கன்றுக்குட்டியின் கயிற்றை அவிழ்த்து விட்டாள். கன்றுக்குட்டி துள்ளிக் கொண்டு மாட்டிடம்





ஓடியது.

சிறுமி இந்து சந்தோஷப் பட்டாள். உற்சாகமாக நடந்தாள். பாதையின் ஒரு பக்கத்தில் குதிரையும் மறுபக்கம் புல்லுக் கட்டும் கிடந்தது. குதிரை தின்று விடப் போகிறதென்று குதிரைக்காரன் அப்படிப் போட்டிருப்பதாக எண்ணி புல்லுக் கட்டை இழுத்துக் கொண்டு வந்து குதிரையின் அருகில் வைத்தாள். குதிரை சந்தோஷமாய் கனைத்தது.

ஒரு பெரிய மருதாணி மரம். "குழந்தை, என்னை உலுக்கி விட்டுப் போயேன். பாரம் தாங்க முடியவில்லை'' என்று வேண்டுகோள் விடுத்தது.

பலம் கொண்ட மட்டும் உலுக்கினாள் இந்து. இலைகள் பொல பொலவென உதிர்ந்தன. "அப்பாடா! மிக்க நன்றி" என்றது மருதாணி.

சந்தோஷமாக நடந்தாள் இந்து.

"இங்கே வாயேன்!'' இந்து சுற்று முற்றும் பார்த்தாள். யார் அழைத்தது என்று தெரியவில்லை!

"நான்தான் குளம். என் மேல் பாசி படிந்திருக்கிறது பார். கொஞ்சம் அதை எடுத்துப் போடேன். நாற்றம் தாங்க முடியவில்லை" என்று கெஞ்சியது.

மெதுவாக படிக்கட்டுகளில் இறங்கி கடைசிப் படிக்கட்டில் நின்று மூலைகளில் ஒதுங்கி இருந்த பாசிகளை எடுத்து, எடுத்து நீரில்லாத மேல் படிக்கட்டுகளில் போட்டாள். தோள் பட்டை வலித்தது. ஆனாலும் நிறுத்தவில்லை!

குளம் மகிழ்ச்சியுடன் "போதும், சின்னக் குழந்தையானாலும் ரொம்பப் பொறுமைசாலி. மகா சுறுசுறுப்பு. மறுபடி பாசி சேர்ந்தால் உன்னைப் போல் நல்லவர்கள் வரும் போது எடுத்துப் போடச் சொல்கிறேன்'' என்றது. இந்து கரையேறினாள்.

சிறிது தூரம் போனதும் ஒரு கிழவி மயக்கமாயிருந்தாள். குளத்து நீரால் நனைந்திருந்த பாவாடையால் கிழவியின் முகத்தைத் துடைத்தாள் இந்து. கிழவியின் மயக்கம் தீர்ந்தது.

"எத்தனையோ பேர் இந்த வழியாகப் போனார்கள். நீ சின்னவளாயிருந்தாலும் நம்மால் முடியாது என்றெண்ணாமல் முதல் உதவி செய்தாய். பக்கத்தில் தான் என் வீடு. வா'' என்றவள் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

"பாவாடையெல்லாம் இப்படி சொட்டச் சொட்ட இருக்கிறதே! அந்த அலமாரியில் என் பேத்தியின் உடைகள் வைத்திருக்கிறேன். உடலை சுத்தம் செய்து கொண்டு மாற்று உடை அணிந்து வா'' என்றாள் பாட்டி.

அலமாரியைத் திறந்த இந்து திகைத்து நின்றாள். விதவிதமான மடிப்புக் கலை

யாத ஆடைகள். எல்லாமே அழகாக இருந்தன. இருப்பதற்குள் சுமாரான ஒன்றை அணிந்துகொண்டாள்.

ஏற்கெனவே புதுத் துணிக்கு ஆசைப்பட்டு பொய் சொல்லி அம்மாவின் வெறுப்பை சம்பாதித்தது நினைவுக்கு வந்தது.

இந்துவைப் பார்த்த பாட்டி "அட! நீ ரொம்ப சமர்த்து. இன்னொருவர் உடமைக்கு ஆசைப்படாத உன் குணம் மெச்சத் தகுந்தது" என்றவள், நிறைய கொழுக்கட்டைகளைக் கொடுத்தாள்.

"என்ன பார்க்கிறாய்? பிள்ளையாருக்கு நைவேத்தியம் பண்ணி விட்டு வரும் வழியில் தான் தலையைச் சுற்றி மயக்கமாகி விட்டேன். இன்றைக்குச் சாப்பாடே கொழுக்கட்டையும் இட்லி, வடையும் தான்! எது பிடிக்கிறதோ சங்கோஜப் படாமல் கேட்டு வாங்கி திருப்தியாகச் சாப்பிடு. அப்போதுதான் பாட்டி சந்தோஷப் படுவேன்" என்றாள்.

இதுதான் கொழுக்கட்டையா? இந்துவுக்கு எலியைக் கொழுக்கட்டை என்று நினைத்தோமே என்று சிரிப்பாய் வந்தது.

தானும் பாட்டியும் சாப்பிட்டதும் அந்த இடத்தை சுத்தம் செய்தாள். அம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கிளம்பினாள்.


பாட்டி அவளுக்குப் புதிய ஆடை ஒரு ஜோடி எடுத்து ஒரு பையில் போட்டுக் கொடுத்தாள். இந்து ஆனந்தமாக நடந்தாள்.

குளம் மறுபடி கூப்பிட்டது. படி இறங்கிப் போனாள். "குழந்தாய்! எனக்கடியிலுள்ள புதையல் இது. பிரதி உபகாரம் எதிர்பாராத நல்ல மனமுடையவர்களுக்கு இதை தானம் செய்தால் நீரில் பாசி படியாதாம். உன்னைப் போன்ற நல்லவரை நான் இதுவரை பார்த்ததில்லை! வேறு வேலையில்லை என்று அலுத்துக் கொண்டவர்கள்தான் அதிகம். பிடி" என்றபடி ஒரு மூட்டையைப் படியில் வைத்தது.

சந்தோஷத்தில் திக்கு முக்காடிய இந்து நன்றி கூறி வழி நடந்தாள்.

மருதாணி மரம் ஒரு பை நிறைய மருதாணி இலைகளைக் கொடுத்து "வழியில் யாருக்கும் தரக் கூடாது. வீட்டில் போய் தான் பிரித்துப் பார்க்க வேண்டும்" என்று நிபந்தனை விதித்தது.

எங்கிருந்தோ வந்த குதிரை அவளைத் தன் மேல் ஏறிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டது.



குதிரையில் ஒய்யாரமாக வந்தாள் இந்து.

மாடு குறுக்கே நின்று "என்னிடம் பால் வற்றி விட்டதென்று கசாப்புக் கடைக்கு விற்கப் பார்த்தான் எஜமானன். நான் நிலத்தை உழுவேன். வண்டி இழுப்பேன். என்னை ஆதரிக்க மாட்டாயா?" என்று கெஞ்சியது.

"வெயில் ஏறி விட்டது. இந்து வெளியிலே தூங்கி விட்டாள்

போலிருக்கிறது. எழுப்பிக் கூட்டிக் கொண்டு வா" என்று முதல் பெண்ணிடம் சொன்னாள் அம்மா.

மூத்த பெண் வெளியே பார்த்துவிட்டு "இந்து வாசலிலே இல்லியே" என்றாள். "அக்கம், பக்கம் விளையாடப் போயிருப்பாள். பார்த்து அழைத்து வா" என்றாள் அம்மா.

ஒரு மணி நேரம் தேடி விட்டு உதட்டைப் பிதுக்கினாள் தமக்கை. தாயின் மனம் பதறியது. தானும் தேடினாள். நேரம் ஆக ஆக அழத் தொடங்கினாள். வெளியே சென்றிருந்த இந்துவின் அப்பாவும் வந்து விட்டார். நடந்ததை அறிந்து மனைவியைக் கோபித்துக் கொண்டார். யாரும் எதுவும் சாப்பிடவில்லை.

ஆறாவது பெண் பயத்துடன் நடந்ததை ஐந்தாவது பெண்ணிடம் கூறினாள். அவள் அம்மாவிடம் சொல்ல எலிப் பொறியைக் கொடுத்து "ஒவ்வொரு எலி விழுந்தவுடன் ஊர் எல்லையில் விட்டு விட்டு வர வேண்டும். அதுதான் உனக்கு நான் அளிக்கும் தண்டனை" என்றாள் அம்மா.

பெற்றோரும், உடன் பிறந்தவர்களும் வாசலிலேயே இந்துவுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தனர்.

இந்து குதிரை மேல் வருவதைக் கண்டு எல்லோரும் பரபரத்தனர். இந்துவை இறக்கி விட்டு குதிரை சென்றது.

"அப்பா! இந்த மாட்டை பின்புறம் கட்டுங்கள். உள்ளே வாருங்கள். எல்லாம் விபரமாகச் சொல்கிறேன்" என்றவள் மாட்டை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

எல்லா விஷயங்களையும் கேட்ட அம்மா "சரி, மருதாணியை அரைக்கிறேன். நாளைக்கு இலை வாடி விடும். வாருங்கள், இலைகளில் குச்சி, காம்பு கிள்ளலாம்" என்றபடி பையைக் கொட்டினாள். அத்தனையும் தங்க இலைகளாக மாறி இருந்தது கண்டு இந்துவே அதிசயித்தாள் என்றால் மற்றவர் நிலையைச் சொல்லவும் வேண்டுமா?

பசு மாடும் வஞ்சகமின்றி உழுதது. நிலம் முப் போகமும் விளைந்தது. குளம் கொடுத்த புதையலால் புதிய வீடு கட்டிக் கொண்டார்கள். புதிய ஆபரணங்கள், புத்தாடைகள் வாங்கினார்கள்.

குரங்கு



கொம்பில் ஏறி ஆடுமாம்;
குதித்து ஆட்டம் போடுமாம்!
கம்பு எடுத்தால் ஓடுமாம்;
காட்டில் கூட்டம் கூடுமாம்!

கர்ணம் போட்டுக் காட்டுமாம்;
கடித்த ஈயை ஓட்டுமாம்!
வர்ணச் சட்டை மாட்டுமாம்;
வாலும் தலையும் ஆட்டுமாம்!

'ராமா' என்றால் புரியுமாம்;
'ரசிப்போம்' என்றும் தெரியுமாம்;
தாமாய்த் தண்ணீர் தூக்குமாம்;
தலை மேல் குடத்தை வைக்குமாம்!

குரங்கு பழங்கள் புசிக்குமாம்;
கூட்டம் குரங்கை ரசிக்குமாம்!
மரங்கள் தோறும் தாவுமாம்;
மலர்கள் பிய்த்துத் தூவுமாம்!

குறும்பு செய்யும் சிறுவனை
'குரங்கு' என்றே திட்டுவோம்!
விரும்பிப் பார்க்கும் விலங்குகள்!
வித்தை காட்டும் குரங்குகள்!

— நெல்லை ஆ. கணபதி

என் குழந்தைப் பருவம்

தஞ்சை மாவட்டத்தில் (இப்போது திருவாரூர் மாவட்டம்) உள்ள அழகான சிற்றூர்களில் ஒன்று திருக்குவளை. திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள கிராமம். என் தந்தையார் பெயர் முத்துவேல். தாயார் அஞ்சுகம். என் தந்தை விவசாயி. சிறந்த வித்வான். கவி எழுதும் ஆற்றல் பெற்ற புலவர். வடமொழிகளில் தனித் தேர்ச்சி பெற்றிருந்தார்.



பாரத - ராமாயணக் கதைகளை பண்டிதர்களை விட அழகாகச் சொல்லுவார். கிராமத்து நிகழ்ச்சிகளை வைத்து உண்மைக் கதைகள் பலவற்றை அவர் எழுதியிருக்கிறார். அவர் இயற்றிய கேலிப் பாடல்களை இன்றைக்கும் திருக்குவளையில் பலர் பாடக் கேட்கலாம். பழுத்த கடவுள் பக்தர்.


இரு பெண் குழந்தைகளை ஈன்றெடுத்த என் பெற்றோர்களுக்கு ஆண் குழந்தை இல்லையே என்ற குறை. பல திருத்தலங்கள் சென்றனர். 1924ம் வருடம் ஜூன் மாதம் மூன்றாம் நாள் நான் பிறந்தேன். நான் கைக் குழந்தையாக இருந்தபோது நடந்த சம்பவம் ஒன்றை இறக்கும்வரை என் தாயார் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரு விடியற்காலையில் எங்கள் வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் மற்ற எல்லா பொருட்களோடும் என் தாயின் கழுத்தில் மின்னிய பொற்றாலியையும் கத்தரித்துக் கொண்டு போய் விட்டனர். "நல்லவேளை... திருடர்கள் நுழைந்தபோது நீ கத்தாமல் இருந்தாய். கத்தியிருந்தால் உன்னை என்ன செய்திருப்பார்களோ" என்று சொல்லுவார் என் தாய்.



வழக்கமாக வைதிகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் அத்தனையும் என் பெற்

றோர்கள் ஒன்று விடாமல் எனக்கும் செய்தார்கள். காதணி விழா மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டது. அதைப் போலவே 'வித்தியாஸ்ரமம்' என்ற பெயரில் ஆடம்பரமாகப் பள்ளிக்கு அனுப்பப்பட்டேன்.

முடி இறக்குதல், பிரார்த்தனை என்ற பெயரில் பல கோயில்களுக்கு என் முடி காணிக்கையாக்கப்பட்டது. ஒருமுறை கனியாகுறிச்சி மலையம்மன் கோயிலுக்கு என் முடியை காணிக்கையாக்குவதாக பெற்றோர்கள் வேண்டிக் கொண்டார்கள். குறிப்பிட்ட நாளில் அந்தக் கோயிலுக்குப் போக முடியவில்லை. எனவே மொட்டையடித்து தலைமுடியை ஒரு கலசத்தில் போட்டு பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். இரண்டாவது முறையாக எங்கள் வீட்டில் நுழைந்த திருடன் அந்தக் கலசத்தை உண்டியல் என தூக்கிக் கொண்டு ஓடி விட்டான்.






பள்ளிக்குப் போவது மட்டுமல்லாமல் இசைக் கல்விக்கும் என் தந்தை ஏற்பாடு செய்தார். ஆனால், அதில் எனக்கு நாட்டம் செல்லவில்லை.

என் மனப் போக்கை உணர்ந்து கொண்ட தந்தையார் பள்ளிப் படிப்பில் என்னைத் தீவிரமாக ஈடுபடுத்தினார். தனியாக ஆசிரியர் வைத்து பாடம் சொல்லித் தரப்பட்டது. படிக்கும்போதே நடிக்கத் துவங்கினேன். பள்ளியில் விடுமுறை என்றால் எங்கள் வீட்டு மாட்டுத் தொழுவத்தை நாடக மேடையாக்குவேன். அர்ச்சுனன், கிருஷ்ணன் வேடங்கள் போட்டுக் கொள்வதில் தனி விருப்பம். ஏனென்றால் அவர்களைப் பற்றி அப்பா அடிக்கடி கதை சொல்லுவார். திருக்குவளை கோயிலிலே உற்சவம் முடிந்த மறுநாள் அதேபோல் மாதிரித் திருவிழா எங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் ஆரம்பமாகும். ரிஷப வாகன பொம்மை ஒன்று எங்கள் வீட்டில் இருந்தது. அதைத் தூக்கி வைத்துக்கொண்டு வாயினால் மேள வாத்யங்கள் முழங்க சாமி ஊர்வலம் நடத்துவோம்.



திருவாரூரில் இருந்து எங்கள் ஊருக்கு

கலைஞர் மு. கருணாநிதி

வரும்போது கச்சணம் என்ற ஊரில் பஸ்ஸில் வந்து இறங்கி நான்கைந்து மைல் நடந்து எங்கள் கிராமத்துக்குச் செல்ல வேண்டும். சில சமயங்களில் இரவு நேரங்களில் தனியே செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அப்போது என் தகப்பனார் சொல்லிக் கொடுத்த 'சிவாய நம'; ஓம் நம சிவாய' என்ற மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டு நடப்பேன். அந்த மந்திரத்தை முணுமுணுத்தால் பேய் பிசாசுகள் அருகே வராதாம்! என் இளம் உள்ளத்திலே அந்த நம்பிக்கை வேரூன்றி இருந்தது. அதேபோல் 'பட்டாணி' என்ற துஷ்ட தேவதை இரவு நேரத்தில் தீவட்டி ஊர்வலமாக வயல்வெளிகளில் போகும் என்று சொல்வார்கள். தீவட்டி வெளிச்சங்கள் என்னவோ உண்மைதான். ஆனால் அவைகள் வயல் வெடிப்புகளில் தோன்றும் கந்தக வாயுவிலிருந்து கிளம்பும் தீச்சுடர்களின் வரிசைதான் என்பதை இந்தக் காலத்திலேயே கூட பலர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையே!

என்னுடைய பன்னிரண்டாம் வயதில் ஏழாம் வகுப்பு படிப்பதற்காக திருவாரூர் பள்ளிக்கு அழைத்துச் சென்றார் என் தந்தை. ஆனால் தலைமையாசிரியரோ 'ஐந்தாம் வகுப்பில்கூட சேர்க்க முடியாது' என்று கூறிவிட்டார். எனக்கு இடமில்லை என்றதும் 'ஐயா... உயர் நிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பிலாவது என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். பள்ளியில் சேராமல் ஊருக்குத் திரும்பினால் எல்லோரும் என்னைக் கேலி செய்வார்கள்' என்று அவரிடம் கெஞ்சினேன். அவரோ இடமில்லை என்றே திரும்பத் திரும்பச் சொன்னார். 'எனக்கு இடம் கிடையாதா... இதோ உங்கள் கண் முன்னாலேயே எதிரிலுள்ள கமலாயம் குளத்தில் விழுந்து சாகப் போகிறேன்' என்று சொல்லி கண் கலங்கி நின்றேன். என்ன நினைத்தாரோ தலைமையாசிரியர். பிறகு என்னைத் தட்டிக் கொடுத்து ஐந்தாம் வகுப்பில் சேர இடம் கொடுத்து விட்டார். ஐந்தாம் வகுப்பில் பனகல் அரசர் என்ற தலைப்பில் துணைப் பாடப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஐம்பது பக்கங்கள் கொண்ட அந்த சிறு நூல் முழுவதையும் மனப்பாடம் செய்தேன். அந்தப் புத்தகம்தான் எனக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது.

1938ம் ஆண்டு தமிழகத்தில் இந்தியை கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று அரசால் முடிவெடுக்கப்பட்டது. அதை எதிர்த்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடந்தன. பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார்கள். இந்தப் போராட்டத்தின் எதிரொலி திருவாரூர் பள்ளியிலும் கேட்டது. நான் என் வயதையொத்த பல மாணவர்களுடன் இணைந்து சிறுவர் சீர்திருத்த சங்கம், இளைஞர் சங்கம் என்ற அமைப்புகளை வைத்திருந்தேன். மாலை நேரத்தில், திருவாரூர் தெருக்களில் கையில் தமிழ் கொடி ஏந்தி, இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் ஊர்வலம் போவோம். என் இந்தி ஆசிரியர் ஊர்வலம் போவதைப் பார்த்து விட்டார். இந்தி எதிர்ப்பு முழக்கங்கள் அடங்கிய துண்டு அறிக்கை ஒன்றை அவரிடமும் கொடுத்தேன். மறுநாள் என் செயலுக்குப் பதில் காத்திருந்தது. இந்தி வகுப்பில் சில இந்தி சொற்களைக் கரும் பலகையில் எழுதி உச்சரிக்குமாறு சொன்னார். 'புரியவில்லை' என்று சொன்னவுடன்

கன்னத்தில் ஓங்கி அறைந்தார். வகுப்பறையே சுழல்வது போலிருந்தது எனக்கு. அதன்பின் நான் இந்தி வகுப்புகளுக்குப் போவதை நிறுத்திக் கொண்டேன்.

'மாலை நேசன்' என்ற பெயரில் பள்ளியில் படிக்கும்போது கையெழுத்து ஏடு ஒன்றை நடத்தினேன். இளமைப் பருவத்திலே எழுதுகின்ற எழுத்துக்களை பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட நிலையில், மாணவர்களும் சிறார்களும் தங்கள் எண்ணத்தை செம்மைப் படுத்திக் கொள்ள, மெருகேற்றிக் கொள்ள கையெழுத்து ஏடுகள் நல்ல வாய்ப்பை அளிக்கின்றன என்பதே என் நம்பிக்கை. நான் நடத்திய ஏடு மாதத்திற்கு இரண்டு வெளியீடு. ஒவ்வொரு வெளியீட்டிலும் எட்டுப் பக்கங்கள். ஐம்பதுக்கும் குறையாது பிரதிகள் எடுத்து விநியோகிப்போம். பேப்பர் செலவு மட்டும் வசூல் செய்வோம். மாலை நேசன் ஏழெட்டு மாதம் நடந்தது. கைகளில் எழுதி ஐம்பது பிரதிகள் எடுப்பது சிரமமாக இருக்கிறதே என்று சிந்தித்தபோதுதான் 'முரசொலி' தோன்றியது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை என்ற அளவிலே அல்ல! துண்டு வெளியீடுகளாக.

பள்ளியில் இறுதி வகுப்பு படிக்கும்போது பொது வாழ்க்கையில் என் ஈடுபாடும் அதிகமாகிக் கொண்டே போனது. தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்ற அமைப்புடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அந்த மன்றத்தின் சார்பாக பல பொதுக்கூட்டங்கள் நடத்தினேன்.

பள்ளி நாட்களிலேயே தீவிர அரசியல்வாதியாகி விட்டதால் மூன்று முறை இறுதி வகுப்பில் தோல்வியுற்றேன். அடுத்த நாள் பரீட்சை என்றால் முதல் நாள் இரவு நெடு நேரம் படித்துக் கொண்டிருப்பேன். 'ஆகா... பிள்ளைக்கு படிப்பில் அக்கறை வந்து விட்டது. இந்தமுறை தேர்ச்சி பெற்று விடுவான்...' என்று பெற்றோர் அகமகிழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் நான் பெரியாரின் குடி அரசு பதிப்பக வெளியீடுகளைப் படித்துக் கொண்டிருக்கிறேன் என்ற உண்மை அவர்களுக்கு எப்படித் தெரியும்!

கையெழுத்து ஏட்டிலே எழுதி நூற்றுக்கணக்கான மாணவர்கள் மட்டுமே நமது எழுத்தைப் படித்தால் போதுமா என்ற அதிருப்தி எனக்கு மனத்தில் மூண்டது. அச்சு வாகனத்தில் என் எழுத்துக்கள் ஏறிட வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது. அப்போது அறிஞர் அண்ணா நடத்திக் கொண்டிருந்த 'திராவிட நாடு' இதழுக்கு 'இளமைப் பலி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பி வைத்தேன். அடுத்த வாரமே திராவிட நாட்டில் அது வெளி வந்து விட்டது. நான் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தையே இல்லை. அடுத்த வாரம் 'பகுத்தறிவு பரமசிவம்' என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரை அனுப்பி வைத்தேன். அதற்கு அடுத்த வாரம் 'நபிகள் நாயகம்' விழாவில் கலந்து கொள்ள திருவாரூருக்கு வந்திருந்தார் பேரறிஞர் அண்ணா.





வந்தவர், தனது நண்பரான டி.என். ராமனிடத்தில் 'இந்த ஊரில் 'கருணாநிதி' என்பவர் யார்? அழைத்து வாருங்கள். பார்க்க வேண்டும்' என்று சொன்னார். நான் சென்றேன். என்னைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் மூழ்கினார் அண்ணா. அவ்வளவு பொடிப் பையனாக நான் இருப்பேன் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. 'படிக்கிறாயா?' என்று கேட்டார். 'ஆமாம்... படிக்கிறேன்' என்றேன் நடுங்கும் குரலில். 'இனிமேல் கட்டுரை எதுவும் எழுதி எனக்கு அனுப்பாதே' என்று சற்று கடுமையாகவே கூறினார். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. பள்ளிப் படிப்பு கெடக் கூடாது என்ற நோக்கில் கூறியுள்ளார் என்று பின்னால் புரிந்து கொண்டேன்.

(கலைஞர் கருணாநிதியின் 'நெஞ்சுக்கு நீதி' நூலில் இருந்து தொகுத்தது)

— ப்ரியன்

அன்னத்தின்

விருபாட்சன் என்ற அரக்க வேந்தன் வேட்டையாடிக் களைத்திருந்த சமயம், பிரம்மலோகத்திலிருந்து திரும்பி வந்த ராஜதர்மன் என்ற அன்னம் பார்த்தது. விருபாட்சனுக்குத் தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தைக் காண்பித்தது. பின்னர் அவனது நகரமான மனுவிரஜம் என்ற நகருக்குச் செல்லும் பாதையை முன் சென்று அடையாளம் காட்டியது.


அது முதல் இருவரும் சிறந்த நண்பர்களானார்கள். கௌதமன் என்ற அந்தணன் சோம்பேறி. உழைத்துப் பிழைக்க விரும்பாதவன். வேதமும் படிக்கவில்லை. தானம் தரும் இடங்களிலெல்லாம் அவனைக் காணலாம். அன்னதானம் செய்யும் இடங்களில் முதல் பந்தியில் அவன் இருப்பான்.

வேடர்களிடமிருந்து அஸ்திரம் பயின்றான். பறவைகளை வேட்டையாடி சுட்டுத் தின்பான். செம்படவர்களிடமிருந்து வலை வீசி மீன் பிடிக்கக் கற்றுக் கொண்டான். சில சமயம் மீன் பிடித்தும் நெருப்பில் பக்குவப்படுத்தி உண்பான்.

ஒரு கோடை காலத்தில் நீர் நிலைகளில் நீர் வற்றி மீன்கள் மடிந்து விட்டன. மதம் பிடித்த யானையொன்று துரத்த ராஜதர்மன் வசிக்கும் ஆலமரத்தடியில் வந்து ஒளிந்து கொண்டான்.

ராஜதர்மன் மிகவும் உயர்ந்த குணமுடைய அன்னம். அது கௌதமனிடமும் நட்புக் கொண்டது.

“கௌதமரே! வருத்தம் வேண்டாம். என் இறகுகளில் ஒன்றைப் பிய்த்து என் தோழன் விருபாட்சனிடம் காட்டும். அவனுடைய நகரம் இங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ளது. கார்த்திகைப் பௌர்ணமிதோறும் ஆயிரம் வேதியருக்கு அன்னதானமும் சொர்ணதானமும் அளிக்கிறான் அவன். உங்களுக்கு இன்றோடு



நட்பு

ஆர். பொன்னம்மாள்

துன்பம் தீர்ந்தது. விருபாட்சனின் ஊரின் பெயர் மனுவிரஜம்" என்றது அன்னம்.


தங்க நிறம் கொண்ட அதன் இறகுகளில் ஒன்றைப் பிய்த்துக் கொண்டு மனுவிரஜத்தை அடைந்தான் கௌதமன். விருபாட்சன் நண்பனின் இறகைப் பார்த்தான்.

"எப்போதிலிருந்து அவன் நண்பனானாய்?" என்று விசாரித்துத் தெரிந்து கொண்டான்.

"வேதம் படிக்காத உனக்கு நண்பனின் சிபாரிசால் தானமளிக்கிறேன். ராஜதர்மன் காசிபருக்கும் – தாட்சாயணிக்கும் பிறந்தவன். பிரம்மஞானம் பெற்றவன். அவன் தோழமையால் பெருமையும் லாபமும் ஏற்படும். அவனுக்கு....?" என்றபடி பெருமூச்செறிந்தான்.

விருபாட்சனுக்கு மூன்று காலங்களையும் அறியும் வல்லமை உண்டு.

கார்த்திகைப் பௌர்ணமி அன்று நடந்த அன்னதானத்தில் கௌதமனும் கலந்து கொண்டான். எல்லோருக்கும் சந்தனம் பூசி, மாலை அணிவித்து பாத பூஜை செய்து அறுசுவை விருந்தை உபசரித்து அளித்தான் விருபாட்சன். பின்னர் பொற்கிண்ணங்களில் பாலும் தேனும் நெய்யும் நிறைத்



துத் தானம் செய்தான்.

வஸ்திரங்கள் ஒரு ஜோடி, கம்பளி, மெத்தை, குடை, செருப்பு, தங்கப் பூண் கட்டிய ருத்ராட்ச மாலை, நவரத்தின மாலை, துளசி மாலை, ஒரு தங்கத் தட்டு நிறைய நவரத்தினங்கள் எல்லாம் தானம் கொடுத்தான்.

இவ்வளவு தானம் வாங்கியும் கௌதமன் மனம் திருப்திப்படவில்லை. ''ஆகா! ராஜதர்மன் எத்தனை தளதள வென்று இருக்கிறது! அதை நெருப்பில் சுட்டு உப்பும் மிளகுப் பொடியும் தடவி உண்டால் எத்தனை ருசியாக இருக்கும்! ஒருவேளை நமக்கும் பிரம்ம ஞானமும் பறக்கும் சக்தியும் வந்தாலும் வரும்'' என்று நினைத்தான்.

ராஜதர்மன் இனிய குரலில் கௌதமனை வரவேற்றது. நீரில் மூழ்கி மீன்களைப் பிடித்து வந்து கௌதமன் முன் போட்டது. எங்கிருந்தோ எரியும் கள்ளி ஒன்றைக் கவ்வி வந்து தீ மூட்டியது.

''உன் விருப்பப்படி சுட்டுத் தின்று கொள்'' என்றது. கனிந்த பழங்களைப் பறித்து வந்து கௌதமனிடம் கொடுத்தது. மலர்களைப் பரப்பி மெத்தை போல் செய்து, 'இதில் படுத்து ஓய்வெடுங்கள்' என்று உபசரித்தது.

கௌதமன் உறங்கிய பிறகு ராஜதர்மனும் அவனருகே படுத்து உறங்கி விட்டது.

நள்ளிரவு. நன்றி கெட்ட கௌதமன் மெதுவாக எழுந்தான். அருகில் எரிந்த தீயிலிருந்து இரண்டு பெரிய கொள்ளிக் கட்டைகளை எடுத்து அன்னத்தைச் சுட்டெரித்தான்.

இறக்கைகளைப் பிய்த்து வெட்டிக் கொன்று சுட்டு எடுத்து மூட்டை கட்டினான். தன் ஊர் நோக்கிப் புறப்பட்டான்.

விரூபாட்சன் கௌதமன் அறியாமல் அவனை வேவு பார்க்க தன் புதல்வனை அனுப்பியிருந்தான். அவன் கௌதமனை வீரர்களுடன் சூழ்ந்து கொண்டு கைதியாக்கித் தந்தை முன் நிறுத்தினான்.

''இவனை நாம் கொன்று தின்றால் நமக்கும் நன்றி கெட்ட குணம் வந்து விடும். இவனைக் கண்டதுண்டமாய் வெட்டி நாய் நரிகளுக்குப் போடுங்கள்'' என்று உத்தரவிட்டான் அரக்கனாகிய விரூபாட்சன்.

அப்படியே செய்தனர் ஏவலர்.

நாயும் நரியும் கௌதமன் மாமிசத்தைத் தொடாமல் ஒதுங்கிச் சென்றன. பூமியில் புதைத்தனர். பூமாதேவி அதை ஏற்க மறுத்ததால் அப்பகுதியில் பூமி பிளவுண்டு பிணத் துண்டுகள் மயானத்தின் நாற்புறமும் எகிறின.

அன்னத்தின் உடலை சந்தனக் கட்டை அடுக்கி விரூபாட்சன் கண்ணீரோடு தகனம் செய்யும் போது இந்திரன் பிரசன்னமாகி அன்னத்தின் உடலில் அமிர்தம் தெளிக்க அன்னம் உயிர் பெற்றெழுந்தது.

''கௌதமனையும் பிழைப்பிக்க வேண்டும்'' என்று கேட்டது ராஜதர்மன். இந்திரன் அவனது மாமிசத் துண்டுகளைச் சேர்த்து அவனுக்கும் உயிர் கொடுத்தான்.

விரூபாட்சனையும் ராஜதர்மனையும் பார்க்க வெட்கித் தலைகுனிந்தான் கௌதமன்.



''டேய் ராஜா, என்னை காலையில் ஆறுமணிக்கு எழுப்பி விடு.''

''சரிடா, எதற்கும் ஐந்தேமுக்கால் மணிக்கு நீ என்னை எழுப்பி ஞாபகப் படுத்துடா...''

– க. பூங்கொடி

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. நடராஜர் என்றதும் இந்த ஊர்தான் நினைவுக்கு வரும் (6)

3. பொங்கல் செய்ய புது ________ பயன்படுத்துவார்கள் (2)

5. கோழிகள், ஆடுகள் மொத்தமாக வளர்க்கப்படும் இடம் (3)

11. பள்ளத்தை இப்படியும் அழைக்கலாம் (2)

வலமிருந்து இடம்

4. இந்தியப் பெண்களின் பாரம்பரிய உடை (2)

10. சிற்றூர்களிலும் பெரிய தொழிற்சாலைகளிலும் நேரத்தை அறிவிக்க இது ஊதப்படும் (3)

13. நதி என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

14. சொந்த வாழ்க்கை வரலாறு (6)

மேலிருந்து கீழ்

1. கழியை இரு கைகளாலும் பிடித்து முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் சுழற்றித் தாக்கவும் தாக்குதலைத் தடுக்கவும் மேற்கொள்ளும் கலை (5)

2. இது என்றால் பிணமும் வாய் திறக்கும் (3)

7. மரத்திலிருந்து கிடைக்கும் நறுமணப் பொருள். விசேஷங்களில் பங்கு பெறும் (5)

9. இந்தியாவில் பல ________ பேசுபவர்களும் வாழ்கிறார்கள் (2)

11. பெரிய மணற்மேடு, சிறிய மலையை இப்படியும் அழைக்கலாம் (3)

12. குடகு மலையில் உற்பத்தியாகும் நதி (3)

கீழிருந்து மேல்

4. விடியற் காலையில் கூவும் பறவை (3)

6. அந்தக் காலத்தில் எழுத்தாணியைக் கொண்டு இதில் எழுதினார்கள் (2)

8. நெல் முதலிய தானியங்களைச் சேமித்து வைக்க உதவும் சாதனம். கீழ்ப்புறம் திறப்பதற்கான அமைப்பு இருக்கும் (5)

14. மழையாலும் நல்ல விளைச்சலாலும் நாடு அடையும் நன்மை (5)


— **பி. காயத்ரி,**
ஆதனூர் .

விடை 68 ஆம் பக்கம்





நாகரிகத்தின் முதற்படி விவசாயம்!



மனிதன் இன்று அடைந்துள்ள நாகரிகம் மாயாஜாலம் நிகழ்த்தி ஒரு நாளிலோ அல்லது ஒரு வருடத்திலோ அல்லது சில நூறு வருடங்களிலோ கிடைத்தது அல்ல. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் உழைத்து, சிந்தித்து படிப்படியாக அடைந்த முன்னேற்றம் தான் இன்றுள்ள நாகரிகம்.

நாகரிகம் எப்படி தோன்றியது? ஆற்று ஓரங்களில்தான் முதன் முதலில் நாகரிகம் தோன்றியது. ஏனென்றால் அங்குதான் விவசாயம் செய்ய முடிந்தது. எனவே விவசாயமே நாகரிகத்தின் முதற்படி எனலாம்.

பண்டைக் காலத்தில் மிகப் பெரிய நாகரிகம் எகிப்தில் உள்ள நைல் நதி ஓரமும் மெசபடோமியாவில் உள்ள டைகரிஸ் நதி ஓரமும் தோன்றியது. நம் நாட்டில் சிந்துநதிக்கரை ஓரமும் சீனாவில் மஞ்சள் நதிக்கரை ஓரமும் சிறந்த நாகரிகங்கள் தோன்றின.

ஆதி மனிதன் தன் உணவுத் தேவைக்காக பல இடங்களுக்கு அலைந்து, திரிந்து நாடோடி வாழ்க்கை நடத்தினான். எங்கு வேட்டையாட முடியுமோ, மீன் பிடிக்க முடியுமோ, பழங்கள், தானியங்கள் கிடைக்குமோ அங்கெல்லாம் சென்றான்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் விதையிலிருந்து செடி வளர்வதையும், அதிலிருந்து உணவு தானியம் கிடைப்பதையும் கண்டறிந்தான். இதிலிருந்துதான் விவசாயம் தோன்றலாயிற்று. அதோடு பால், முட்டை, இறைச்சிக்காகப் பிராணிகளையும் வளர்க்க ஆரம்பித்தான்.



பயிர் செய்ததாலும் பிராணிகளை வளர்த்ததாலும் ஒரே இடத்தில் நிலையாக வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரே இடத்தில் வாழக்கூடிய சூழ்நிலை அவர்களின் பல திறமைகளை வெளிப்படுத்த உதவியது. பானை மற்றும் கூடைகளை உருவாக்கி அறுவடை செய்த தானியங்களைச் சேமிக்க ஆரம்பித்தனர்.

மண்ணை உழுவதற்கு ஆரம்பத்தில் பெண்களும் ஆண்களும் இடுப்பில் கயிறு கட்டி உழுதார்கள். இந்த வேலை மிகவும் சிரமம் தரக்கூடியதாக இருந்தது. கி.மு. 3000-ல் உழுவதற்குப் புதிய முறை கண்டு பிடிக்கப்பட்டது. இந்த முறையில் மனிதனுக்குப் பதில் பசுவும் பின் எருதுவும் பயன்படுத்தப்பட்டன. அதற்குப் பின் குதிரையைக் கூட உழுவதற்குப் பயன்

படுத்தினர். இந்த முறையால் சிரமம் குறைவாகவும் பயன் அதிகமாகவும் இருந்தது.

விவசாயத்தில் முன்னேற்றம் ஏற்பட, ஏற்பட உற்பத்தி அதிகரித்தது. தங்கள் தேவைக்கு மேல் உற்பத்தியான பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுத்து தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பண்டமாற்று முறை ஏற்பட்டது. இது வணிகத்துக்கு வழிவகுத்தது. விவசாயம் வணிக வளர்ச்சியோடு இணைக்கப்பட்டவுடன் மேலும் பல







மக்களை அது ஈர்த்தது. மக்கள் மேலும் மேலும் உழைக்க ஆரம்பித்தனர். சமூகத்தில் - ஆண்டான் அடிமை முறை ஏற்பட்டது. சிலர் வாழப் பலர் உழைத்தார்கள்.

விவசாய வளர்ச்சியில் ரோமானியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. விவசாயத்தில் அவர்கள் முக்கியமான தொழில்நுட்பத்தைக் கையாண்டனர். அதுதான் நிலத்தை இருவிதமாகப் பயன்படுத்துதல். அதாவது நிலத்தின் ஒரு பாதியில் மட்டும் பயிர் செய்து விட்டு மறு பாதியை தரிசாக விட்டு விடுவது. அடுத்த முறை பயிர் செய்யாத நிலத்தில் பயிர் செய்து ஏற்கெனவே பயிர் செய்த நிலத்தை தரிசாக விடுவது. இம்முறை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதனால் மண்ணுக்குத் தேவையான ஈரப்பதமும் ஊட்டச்சத்தும் கிடைத்தது.

அதற்குப் பின் பயிர் சுழற்சி முறையும் உருவானது. இம்முறையில் ஒரு முறை நெல் விதைத்தால் அடுத்த முறை பருப்பு விதைப்பது. பயிற்சுழற்சி முறையால் நிலத்தை மண் அரிப்பு மற்றும் நிலத்தடி நீர் குறைதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க முடிந்தது.

காலங்கள் செல்லச் செல்ல உயரமான மலைப் பிரதேசங்களிலும் நிலத்தை வெட்டி விவசாயம் செய்ய ஆரம்பித்தனர்.


தொழில்நுட்பம் வளர வளர மிகத் தொலைவில் உள்ள ஆற்று நீரை கால்வாய் மூலம் கொண்டு வந்து விவசாயத்திற்குப் பயன்படுத்தினர். பின்பு நீர்ப்பாசன முறையும் ஏற்பட்டது.

இவ்வாறு வளர்ந்து வந்த விவசாயத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. பண்ணை யாட்சி முறை எங்கும் பரவியது. பண்ணையாட்சியில் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் நிலங்களைப் பிரித்துக் கொண்டனர். அப் பண்ணைகளில் சாதாரண விவசாயிகள் அடிமை வேலை பார்த்தனர்.

நீண்ட கால விவசாயத்திற்குப் பின் அதே நிலத்தில் மூன்று, நான்கு விதமான குறுகிய காலப் பயிர்கள் பயிரிடப்பட்டன.

விவசாயத்தில் விஞ்ஞானபூர்வமான முன்னேற்றங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. கலப்பின பயிர்கள், விதையில்லா திராட்சை, பெரிய அளவு தக்காளி, கத்தரி என உருவாக்கப்பட்டுள்ளன. உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உருளையையும் தக்காளியையும் இணைத்து 'பொமேட்டோ' என்ற புதிய வகை காயையே உருவாக்கி விட்டார்கள்!

இன்றைய விவசாயத்தில் இயந்திரங்கள் வந்து விட்டன. உணவு உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.



ஆதிகாலத்தில் அனைவரும் உழைத்து சிறிதளவே உணவு பெற்றனர். இன்று விவசாயிகள் உற்பத்தி செய்ய விவசாயம் பற்றி அறியாத பல கோடி மக்களும் அறுசுவை உணவு உண்ண முடிகிறது.

இடைவிடாத விவசாயத்தால் மண்ணின் வளம் குறைந்து வருகிறது. இதற்காக ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் மண்ணின் இயற்கை தன்மை கெட்டுப் போகிறது. இது மட்டுமின்றி பயிரை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்க பூச்சி மருந்து பயன்படுத்துவதால் உணவிலும் ரசாயனப் பொருட்களின் தாக்கம் ஏற்படுகிறது. பயிர்களுக்கு இயற்கை உரங்களை இட்டு மண்ணையும் மனிதனையும் காக்க வேண்டிய பொறுப்பு நம்மிடமிருக்கிறது.



தெரிந்து கொள்ளுங்கள்!

● பாம்பின் பரம எதிரி கீரிப்பிள்ளை என்பது தெரியும். நல்ல பாம்பின் விஷப்பல் உள்ள தலையையும் அதன் விஷச் சுரப்பிகளையும் கீரி விழுங்கினாலும் அதற்கு எந்தவித கேடும் ஏற்படுவதில்லை.

● ஆஸ்திரேலிய கடல்வாழ் உயிரினமான ஒருவகை ஜெல்லி மீன்கள் அதிக விஷம் வாய்ந்தவை. இந்த ஜெல்லி மீன்கள் கடித்தால் மூன்று நிமிடங்களில் கடிபட்டவர் இறந்து விடுவார்.

- பி. சத்தியா,
பத்தாம் வகுப்பு, அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

வாழ்த்து அட்டை செய்வோமா?

இது புத்தாண்டு, பொங்கல் சீசன். எல்லோரும் உறவினர், நண்பர்களுக்கு வாழ்த்து அட்டைகளை அனுப்பி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த மகிழ்ச்சியை இன்னும் அதிகரிக்க ஒரு வழி இருக்கிறது. அதுதான் நீங்களே வாழ்த்து அட்டை தயார் செய்வது. இதனால் உங்களின் திறமையும் வெளிப்படும். அதைப் பெறுபவர்களுக்கு உங்களின் சிரத்தையால் மேலும் மகிழ்ச்சி அதிகரிக்கும். சரி இப்ப வாழ்த்து அட்டை எப்படி செய்யலாம்?

இப்ப செய்யப் போற வாழ்த்து அட்டையை உடனே நினைத்தவுடன் செய்து விட முடியாது. வாழ்த்து அட்டை செய்வதற்கு ஒரு வாரம் முன்பே ரோஜா இதழ்கள் அல்லது இதுபோன்ற மென்மையான கண்கவர் பூக்களின் இதழ்கள், புல், வேப்பிலை காம்பு, சிறிய இலைகளைப் பறித்து தடித்த புத்தகத்தில் தனித்தனியாக வைத்து விடுங்கள். ஒரு வாரம் கழித்து புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தால் பூவின் இதழ்கள், இலைகள் எல்லாம் வண்ணம் மாறாமல் ஈரத்தன்மையற்று காகிதம் போல் காணப்படும்.

இவற்றை மெதுவாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு தடித்த காகிதம் அல்லது அட்டையை வாழ்த்து அட்டை எவ்வளவு பெரிதாக வேண்டுமோ அந்த அளவிற்கு வெட்டிக் கொள்ளுங்கள். இந்த அட்டையில் பசையின் உதவியுடன் பூ இதழ்களை பூ



வடிவத்தில் ஒட்டுங்கள். மூன்று, நான்கு பூக்கள் ஒட்டியதும் செடியின் தண்டிற்கு புல் அல்லது வேப்பிலைக் காம்புகளை ஒட்டி பூக்களுடன் சேர்க்கவும். சிறிய இலைகளை காம்புடன் ஆங்காங்கு ஒட்டுங்கள். இதோ மலருடன் கூடிய செடி தயார். இதைச் சிறிது நேரம் காய வைத்துப் பின் பயன்படுத்தலாம். உங்களுக்கு விருப்பமான வாக்கியங்களை எழுதி கையெழுத்திடலாம்.

இதே போல் பூ இதழ்களுக்குப் பதில் பூசணி விதைகளை இதழ்களாகப் பயன்படுத்தலாம். பூசணி விதைகளுக்கு சிவப்பு, மஞ்சள் போன்ற வண்ணங்களைப் பூசி பயன்படுத்த வேண்டும். பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

— பூமா



செருப்பும் குடையும்

துர்காபுரியில் ஒரு முதியவர் வாழ்ந்து வந்தார். அவர் வெளியில் செல்லும் போது ஒரு குடையையும் கூடவே எடுத்துச் செல்வார். அவர் ஒருமுறை கூட குடையை மறந்து வெளியில் செல்ல மாட்டார். அடிக்கடி வெளியில் செல்வதால் அவரைக் குடைத் தாத்தா என்றுதான் ஊரில் உள்ளவர்கள் அழைப்பார்கள்.

ஒருநாள் அந்த முதியவர் கடைவீதிக்குச் சென்று விட்டு வீட்டுக்கு வந்தார். குடையை வீட்டு வாசற்படியிலே வைத்து விட்டுச் சென்றார். அப்போது அவர் கழற்றி விட்டுச் சென்ற செருப்பு குடையிடம் பேசியது :

"ஆமா! உன்னைச் சந்திக்கற துக்கு ஒரு ஜென்மம் எடுத்து வர ணும் போல் இருக்கிறது. நீ விலை உயர்ந்தவன். நான் விலையில் தாழ்ந்த வன் என்பதால் என்னை வெளியில் கழற்றி விட்டு செல்கிறாரோ அந்த முதிய வர்" என்று குடையிடம் கேட்டது.

குடை அமைதியாக இருந்தது.

மீண்டும் செருப்பே தொடர்ந்தது. "உன்னை மேலே தூக்கித் தன் தலையைக் காக்கப் பிடிப்பதால் அந்த முதியவருக்கு கைதான் வலிக் கும். ஆனால் என்னை அவர் அணிந்து கொண்டால் அவரை முள், ஆணி போன்ற கொடிய பொருள்களிலிருந்தும் அசுத்தங்களிலிருந்தும் காத்து உதவுகிறேன். ஆனால் என்னை மட்டும் ஏன் அந்த முதியவர் வெளியே கழற்றி விட்டுச் செல் கிறார்?" என்று மிகவும் வருத்தப்பட்டது.



இதுவரை பொறுமையாக அனைத் தையும் கேட்டுக் கொண்டிருந்த குடை இனி தன் பங்குக்குப் பேசியது : "நண் பனே! நீ சொன்ன அனைத்தையும் கேட் டுக் கொண்டேன். நீ கூறினாயே அசுத்த மானவைகளை நான் ஏற்றுக் கொண்டு அம்முதியவரின் காலைக் காக்கிறேன் என்று, அதில்தான் நீ கேட்ட கேள்விக்கு விடை உள்ளது. அது என்ன தெரியுமா?" என்று புதிர் போட்டது குடை.

உடனே செருப்பு, "என்ன? என்ன?" என்று அவசரமாகக் கேட்டது.


தொடர்ந்தது குடை, "ஆமாம்! நீ அசுத்தமானவைகளை மிதிக்கிறாய். அதைப் போட்டுக் கொண்டு உள்ளே சென்றால் அம் முதியவரின் வீடும் அசுத்தமாகி விடுமே! உன் எண்ணம் அவரை அசுத்தத்திலிருந்து காப் பதுதானே!"

செருப்பிற்கு குடை சொல்வது சரியெனப்பட்டது. அது தன் தவறை உணர்ந்து கொண்டது.

வெளியில் வந்த முதியவர் தன்னுடைய குடையை உள்ளே எடுத்துச் சென்றார்.

உடனே செருப்பு, குடைக்கு 'டாடா' சொல்லி குடையை சந்தோஷப் படுத்தியது.

— வி. சுகுணா



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டிகள்!

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களுக்குக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக சிறுகதைப் போட்டிகளை நடத்தி வந்தோம். மாணவர்களுக்கு மட்டும்தான் போட்டியா? எங்களுக்குக் கிடையாதா என்று பெரியவர்களும் கேட்டனர். அதனால் இந்த ஆண்டு மாணவர்/ஆசிரியர்/பெற்றோர் ஆகிய முத்தரப்பினருக்கும் போட்டிகள் அறிவித்திருக்கிறோம்.

மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி

மாணவர்கள் எந்தத் தலைப்பில் வேண்டுமானாலும் கட்டுரையை எழுதி அனுப்பலாம். கட்டுரை கோகுலத்தில் ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.

முதல் பரிசு ரூ. 300
இரண்டாம் பரிசு ரூ. 200
(இரண்டு கட்டுரைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 100
(3 கட்டுரைகளுக்கு)

ஆசிரியர்களுக்குக் கவிதைப் போட்டி

சிறுவர்களுக்கான கவிதைகளை பள்ளி ஆசிரியர்கள் எழுதி அனுப்ப வேண்டும். எந்தத் தலைப்பிலும் 16 முதல் 24 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை எழுதலாம்.

முதல் பரிசு ரூ. 300
இரண்டாம் பரிசு ரூ. 200
(இரு கவிதைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 100
(மூன்று கவிதைகளுக்கு)

பெற்றோர்களுக்குச் சிறுகதைப் போட்டி

சிறுவர்களுக்கான சிறுகதைகளை பெற்றோர்கள் எழுதி அனுப்ப வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், வரலாறு, அறிவியல் என எத்தகைய சிறுகதையாக வேண்டுமானாலும் இருக்கலாம். சிறுகதைகள் கோகுலத்தில் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் இருக்கவேண்டும்.


முதல் பரிசு ரூ. 400
இரண்டாம் பரிசு ரூ. 300
(இரு கதைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 250
(இரு கதைகளுக்கு)

போட்டி விதிகள்:

1. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
2. பிரசுரத்துக்கு ஏற்கப்படாத படைப்புகளைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை அதனுடனே அனுப்ப வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயன் இல்லை. இதுகுறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.
3. ஒருவரே எத்தனை படைப்புகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
4. அயல்நாட்டில் உள்ளவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.
5. படைப்புகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதை/கட்டுரை/கவிதைப் போட்டி எனக் குறிப்பிட வேண்டும்.
6. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

கடைசி தேதி: 31.12.99


14
சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!
அமைப்பு: விஜி படம்: லலிதா
பணமும் புகழும் சேரச் சேர சிந்துபாத்துக்கு ஏதாவது சாகசம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.
என்ன சிந்துபாத், சொந்தமா கப்பல் வாங்கிட்டியா?
ஆமாம்! நிறைய பணம் இருக்கே. சொந்தக் கப்பலில் பயணம் செய்ய ஆசை. அதான்...
புதிய கப்பலில் சரக்குகளோடு பயணிகளையும் ஏற்றிக்கொண்டு கிளம்பினான் சிந்துபாத்.
சிந்துபாத், தங்களுடன் பயணம் செய்வது இனிமையான அனுபவம்!


நாட்கள் சென்றன.
வியாபாரம் எல்லாம் முடிந்தது.
நல்ல வருமானம் கிடைச்சிருக்கு.
ஊருக்குத் திரும்புவதற்குள் சில தீவுகளுக்குச் சென்று சுற்றிப் பார்க்கலாமே!
உங்களுக்கு விருப்பம் என்றால் எனக்கும் சம்மதம்தான்.
கப்பல் ஒரு தீவை அடைந்தது.
சிந்துபாத், நீங்க இறங்கலையா?
இல்லை. பத்திரமாகப் போயிட்டு வந்து விடுங்கள்.


சிறிது நேரத்தில் –
சிந்துபாத்! இந்தத் தீவுல ஒரு வெள்ளை மண்டபம் இருக்கு. சீக்கிரம் வாங்க!
உடனே சிந்துபாத்துக்கு பறவையின் முட்டை நினைவுக்கு வந்தது.
ஐயோ! யாரும் போகாதீர்கள்! நான் சொல்றதை யாரும் கேட்க மாட்டேங் கிறாங்களே...
சிந்துபாத் தயங்காமல் கடலில் குதித்தான்...
எப்படியாவது தடுத்தாகணும்...



என்ன இது? மண்டபத்திற்கு வாயிலே இல்லை!
இந்தக் கல்லால் உடைத்துப் பார்க்கலாம்.
ஐயோ! உள்ளேயிருந்து தண்ணீர் வருதே!
ஏதோ பறவை எட்டிப் பார்க்குதே...
அங்கு வந்த சிந்துபாத் –
ஐயோ! நான் பயந்தது சரிதான்! ருக் பறவையோட முட்டையை உடைச்சுட்டாங்க!
அப்போது சூரிய ஒளி மறைந்தது.
(தொடரும்)




நிலையான எண்ணம் இல்லாமல் அடிக்கடி தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டிருப்பவரை 'பச்சோந்தி' என அழைப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஏன் இப்படி அழைக்கிறார்கள்? பச்சோந்தி எதிரிகளிடமிருந்து த்ன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இடத்திற்கேற்ப நிறத்தை மாற்றிக் கொள்கிறது. இதன் காரணமாகவே நாமும் இப்படி அழைக்கிறோம்.

நாம் சர்வசாதாரணமாகப் பார்க்கும் ஓணானின் உறவினர்தான் இந்தப் பச்சோந்தி.

இவற்றின் பெரும்பாலான இனங்கள் ஆப்பிரிக்காவிலும் மடகாஸ்கரிலும் வாழ்கின்றன. காமிலியான் பிரிவில் சில இனங்கள் அரேபியா, தென் இந்தியா மற்றும் இலங்கையிலும் காணப்படுகின்றன. இந்தியப் பச்சோந்திகள் காமிலியான் கால்க்கரேட்டஸ் எனப்படுகின்றன.

பச்சோந்தியின் வாழிடம் மரம். இதன் உடலை விட கால்கள் நீளமானவை. நாம் கைகளால் பிடித்துக் கொள்வதைப் போல இது கால்களால் பற்றிக்கொள்ளும். முன்னங்கால்களில் மூன்று விரல்கள் முன்பக்கமாகவும் இரண்டு விரல்கள் பின்பக்கமாகவும் இருக்கும். பின்னங்கால்களில் மூன்று விரல்கள் பின்னோக்கியும் இரண்டு விரல்கள் முன்னோக்கியும் இருக்கும். கிளியைப் போல கால்களால் மரத்தைப் பற்றிக்கொள்ளும்.



பச்சோந்தியின் வால் மிகவும் நீளமானது. இந்த வாலும் கிளை, இலைக்

பச்சோந்தி
நிறம் மாறுவது ஏன்?

எஸ். சுஜாதா

காம்பு முதலியவற்றைச் சுற்றிப் பற்றிக் கொள்ளக்கூடியது. கிளைகளைப் பிடித்துக் கொள்ளாத போது இந்த வால் கீழ்நோக்கி சுருண்டு இருக்கும். கால்களும் வாலும் இவை மரத்தில் ஏறி வாழ ஏற்ற சிறந்த அமைப்புகள்.

தலை உச்சியில் தட்டையாகவும் இரு பக்கங்களிலும் அகலமா கவும் இருக்கும். சில இனங் களுக்குக் கொம்பு போன்ற நீட்சிகளும் காணப்படும்.




பச்சோந்தியின் கண்களும் நாக்கும் மிகவும் விசித்திரமானவை. நம் கண்களால் ஒரு நேரத்தில் ஒரு பொருளை மட்டுமே பார்க்க முடியும். ஒன்றாகவே திரும்பும். ஆனால் பச்சோந்தியின் கண்கள் தனித் தனியாக வெவ்வேறு திசைகளில் மேலும் கீழும் திரும்பக்கூடியவை. வலக்கண் இலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் இடக்கண் பூச்சியைப் பார்த்துக் கொண் டிருக்கும். இரையைப் பிடிக்கும் போது இரு கண்களையும் ஒருநிலைப்படுத்தி தூரத்தைக் குறிபார்த்து நாக்கை நீட்டும். இந்த மாதிரியான பார்வை ஊர்வன பிராணிகளில் வேறு எதற்கும் இல்லை!

கண்ணின் இமைகள் ஒரு வட்டமான மடிப்பாகக் கண்களை மூடிக் கொண்டிருக்கும். வட்டத்தின் நடுவில் சிறு துவாரம் இருக்கும். இதன் வழியே கண்ணின் பாவை தெரியும்.



நாக்கு மிக மிக நீளமானது. நாக்கின் நுனி தடித்தும் வர வரக் குறுகியும் காணப்படும். நுனி பிசுபிசுப்பாக இருக்கும். நாக்கின் அடிப்பகுதி நீட்டக் கூடிய சக்திமிக்க நார்த்திசுவால் அமைந்துள்ளது. நாக்கை மின் னல் வேகத்தில் வெளியில் நீட்டி உள்ளே இழுத்துக் கொள் ளும். இதன் உடல் நீளத்தை விட நாக்கின் நீளம் அதிகம். இரண்டு மீட்டர் தூரத்தில் உள்ள பூச்சியைக் கூட குறி பார்த்து நாவை நீட்டி பிடித்து விடும். பிசுபிசுப்பான நாக்கில் பட்ட பூச்சி அடுத்த நொடியில் வாய்க்குள் அகப்பட்டுக் கொள் ளும்.

அதிசயமான நாக்கைப்



முதுகெலும்புத் தொகுதியில் ஊர்வன வகுப்பில் ஒந்தி வரிசையில் நிறத்தை மாற்றக்கூடிய இயல்புடைய ஓணான் போன்ற பிராணிகள் சில உண்டு. அவற்றில் பச்சை நிறமுடைய பிராணிகளுக்குப் பச்சோந்தி என்று பெயர். இவை காமீலியான்டிடீ என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை. இதில் நான்கு ஜாதிகளும் சுமார் நூறு இனங்களும் உண்டு.

பெற்றுள்ள பச்சோந்தி இரைக்காக ஓடி ஆடி வேட்டையாடுவதில்லை. இரையை நின்று, நிதானித்து கவனித்து மெதுவாகப் பதுங்கி வந்து நாக்கு எட்டும் தூரத்தை அடைந்தவுடன் சப்தமில்லாமல் நாக்கை நீட்டும்.

பூச்சிகள், வெட்டுக்கிளி, பட்டாம் பூச்சி, ஈ, கரப்பான் போன்றவைகளே பச்சோந்தியின் விருப்பமான உணவு.

பச்சோந்திகள் மட்டும்தான் நிறத்தை மாற்றிக் கொள்கின்றனவா? இல்லை. இவை போன்ற சில இனங்களும் நிறத்தை மாற்றிக் கொள்ளும் இயல்புடையவை. சாதாரண ஓணான் கூட நிறம் மாறும்!

நிறம் மாறுதல் எப்படி நிகழ்கிறது? நிறம் மாற்றம் ஓரளவுக்கு உணர்ச்சித் தூண்டுதல்களால் ஏற்படும் எதிர்வினையாகும். அது போக ஒளி, வெப்பத்திற்கேற்பவும் நிறம் மாறும். பகலில் சூரிய ஒளியும் வெப்பமும் இல்லாத போது இதன் உடல் பழுப்பு நிறமாக இருக்கும். வெப்பம் அதிகம் இருக்கும் போது பச்சை நிறமாக மாறும். பயம், கோபம் ஏற்படும் போது நிறம் மாறுதல் உண்டாகும். தோலில் உள்ள நிறமிப் பொருட்களடங்கிய அணுக்களில் காணும் வேறுபாடுகளால் நிறமாற்றம் உண்டாகிறது. இந்த நிறமாற்றமே இவற்றை எதிரிகளிடமிருந்து காக்கிறது. இதன் உடலில் பிரௌன், பச்சை மற்றும் மஞ்சள் நிறங்கள் காணப்படுகின்றன.

பச்சோந்தி தன்னை எதிரி கண்டு விட்டால் வயிற்றை அழுத்தி உடலை மெல்லியதாக்கிக் கோடு போல் காட்சி தரும். சில சமயம் கிளைக்கு அடியிலும் பதுங்கிக் கொள்ளும். கோபம் வந்தால் உடலை உப்பி, 'உஸ்' என்று சீறும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து இரண்டு மாதங்கள் குடும்பம் நடத்தியபின் பெண் முட்டையிடும். முட்டை ஓடு தடிமனாக இருக்கும். முட்டைகளைத் தரையில் குழி தோண்டி புதைத்து விடும். சூரிய வெப்பத்தால் நான்கு மாதங்களில் குஞ்சுகள் வெளிவரும். சூரிய வெப்பம் கிடைக்காத போது குஞ்சு வெளிவர பத்து மாதங்கள் கூட ஆகலாம்! சில பச்சோந்திகள் குட்டி போடுவதும் உண்டு.

ஓணானின் தோல் செதில்களால் ஆனவை. ஆனால் பச்சோந்தியின் தோல் செதில்களற்று சொரசொரப்பாகக் காட்சி தரும்.



''அவர் ஏன் கடிகாரத்தைக் கையில் கட்டவே மாட்டேங்கிறார்?''
''அதில் முள் இருக்காம்!''
— டி. அனந்தராமன்

''உனக்குத் தோப்பில் உட்கார்ந்து காற்றோட்டமாப் படிக்கக் கூடவா கசக்குது?''
''அது வேப்பந்தோப்பும்மா!''
— கங்கா கணேசன்



சார் தபால்!

✉ "கோகுலம் சுழல் கோப்பை யாருக்குக் கிடைக்கப் போகிறதோ தெரியாது. எங்கள் பள்ளி, கோப்பையைப் பெறா விட்டாலும் எந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறிய ஆவலாக உள்ளேன். முதல் இடத்தைப் பெற்ற பள்ளியை மட்டும் குறிப்பிடாமல் குறைந்தது முதல் ஆறு இடங்களைப் பெற்ற பள்ளிகளின் பெயர்களை வெளியிடுங்கள். அதைக் கண்டாவது நானும் எங்கள் பள்ளியும் மகிழ்ச்சி அடைவோம். செய்வீர்களா?'' என்கிறார் மதுரையிலிருந்து ஆர்.வி. மயில் வாகனன்.

முதல் ஆறு இடங்களைப் பெற்ற பள்ளிகளின் பெயர்களை வெளியிட்டுள்ளோம். சந்தோஷம்தானே மயில்வாகனன்!

– ஆர்.

✉ பாளையங்கோட்டையிலிருந்து செ. செல்வராமன் ''வரும் புத்தாண்டு முதல் கோகுலம் மேலும் அழகுடன் வெளிவர இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். டிசம்பர் கோகுலத்தின் அட்டைப் படமே அசத்தலாக இருந்தது!" என்கிறார்.


✉ ''கிறிஸ்துமஸ் துளிகள் பகுதியில் மிகப் பெரிய பைபிள் பற்றியும் மிகச் சிறிய பைபிள் பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். நன்றி'' என்கிறார் பாண்டிச் சேரியிலிருந்து எஸ். சிவ ரஞ்சனி.

✉ சிதம்பரத்திலிருந்து கே. பத்மா ''யாரும் சிரிக்கக் கூடாது என்ற கதை மிகவும் சிரிப்பாக இருந்தது. வீட்டில் அனைவரும் மிகவும் ரசித்தோம்" என்கிறார்.

✉ "ஆசிரியர் பகுதியிலும் கிரிக்கெட். தனியாக இரண்டு பக்கங்களிலும் கிரிக்கெட் செய்திகளைத் தந்து கிரிக்கெட்டிற்குப் பெருமை சேர்த்து விட்டீர்கள்" என்கிறார் திருச்சியிலிருந்து எம். அசோக்.

✉ கரூரிலிருந்து பி. சுகன்யா "திமிங்கலம் படங்களும் ஓவியப் போட்டி முடிவுகளின் படங்களும் அருமை" என்கிறார்.

✉ பெற்றோர், ஆசிரியர், மாணவர்களுக்கு என முத்தரப்பினருக்கும் போட்டிகளை வைத்திருக்கிறீர்கள். இதனால் குடும்பம் முழுவதுமே திறமையைக் காட்ட முடியும்" என்கிறார் ஆர். சோம சுந்தரம்.



திறமையைக் காட்ட முடியும்!


கோகுலம் ஓவியப் போட்டிக்கு ஓவியங்களை அனுப்பும் மாணவ/ மாணவிகள் தாங்கள் படிக்கும் வகுப்பையும் எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நவம்பர்
கோகுலத்தில்
'அருவி'
என்ற
தலைப்பில்
ஓவியப்
போட்டி
அறிவித்
திருந்தோம்.
அதில் பரிசு
பெற்ற
ஓவியங்கள்.





இரண்டாம் பரிசு
ஜி. செந்தில்பதி,
வேலூர்.



ஓவியப் போட்டி முடிவுகள்



முதல் பரிசு

எஸ். பி.டி. சுபா,
பதினோராம் வகுப்பு,
திருவான்மியூர்.



மூன்றாம் பரிசு

ஜெ. காஜா
நஜிமுதீன்,
ஒன்பதாம்
வகுப்பு,
அரசினர்
உயர்நிலைப்பள்ளி,
ஈரோடு.




ஆறுதல் பரிசு

தி. கருணை
அடைக்கல ராஜ்,
பதினோராம் வகுப்பு,
அரும்பனூர்.



ஆறுதல் பரிசு

எஸ். ஸ்ரீதேவி,
வேலூர்.



அம்மன் கோயில் கிழக்காலே ஓடுது!

நோ பால்!

நியூசிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே நடந்த கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தோம். என் தம்பிக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லை. எல்லோரும் பார்க்கிறார்களே என அவனும் உட்கார்ந்திருந்தான். திடீரென நாங்கள், 'நோபால்' என்று கத்தினோம். இதைப் பார்த்த என் தம்பி, "அதோ பால் இருக்கே! அப்புறம் எதுக்கு நோ பால்னு கத்தறீங்க? ஒருத்தருக்குக் கண் தெரிய லைன்னா பரவாயில்லை. எல்லோருக்குமா?" என்று வியப்பு மேலிடக் கேட்டான். நாங்கள் அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்தோம்.

— டி. என். பாலகிருஷ்ணன்,
மடிப்பாக்கம்.

அம்மன் கோயில்...

எங்கள் ஊரில் ஏதாவது விசேஷம் என்றால் பொது இடத்தில் டீ.வி.யில் படம் போட்டுக் காட்டுவார்கள். எங்கள் ஊரின் மேற்குப் பக்கம் அம்மன் கோயில் உள்ளது. அன்றும் படம் போட்டார்கள். அந்தப் பக்கமாக வந்த என் தோழியிடம், ''என்ன படம் ஓடுது?'' என்றேன். "அம்மன் கோவில் கிழக்காலே ஓடுது" என்றாள். பக்கத்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த தாத்தா, ''அம்மன் கோவில் கிழக்காலே ஓடுதா?" என்றார் என்னிடம். "ஆமாம் தாத்தா! எல்லோரும் அதைப் பார்க்கத்தான் போறாங்க" என்றேன். தாத்தா கிளம்பிப் போனார். சிறிது நேரம் கழித்து வந்து, "என்னம்மா! அம்மன் கோயில் அசையாமல்தானே



நிற்குது" என்றார் கோபத்துடன். "தாத்தா நான் படத்தைச் சொன்னேன்" என்றபடி மன்னிப்புக் கேட்டேன்.

— ஆர். நித்யா, ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
துத்திப்பட்டு.

உட்காரச் சொல்லுங்கள்!

எங்கள் பள்ளியில் விடுதி வசதி உண்டு. ஒருநாள் விடுதியில் தங்கியிருந்த என் தோழிக்கு டெலிபோன் அழைப்பு வந்தது. தோழி மெதுவாக எழுந்தாள். உடனே விஷயத்தைச் சொல்ல வந்த உதவியாளர், "உங்கப்பா லைன்ல நிற்கிறார். சீக்கிரம் ஓடி வாம்மா" என்றார். இதைக் கேட்ட தோழி, "அப்பாவை நிற்கச் சொல்லாதீங்க. உட்காரச் சொல்லுங்கள். இதோ வந்துட்டேன்" என்றபடி கிளம்பினாள். நாங்கள் இவர்களின் உரையாடலைக் கேட்டுச் சிரித்தோம். பேசிவிட்டுத் திரும்பியவளிடம் விஷயத்தைக் கூற, "பதட்டத்தில் புரியலை" என்றாள்


எங்கள் ஊரில் நடந்தது!

சிரித்தபடி.

– எஸ். நித்யா, ஏழாம் வகுப்பு, அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.

முகம் கொடுத்து...

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஊரி



விருந்து சித்தப்பாவும் சித்தியும் வந்திருந்தார்கள். சிறிது நேரத்தில் சாப்பிட உட்கார்ந்தோம். அப்பா சித்தப்பாவிடம், "நம்ம மணி எப்படியிருக்கிறான்?" என்று கேட்டார். "அவனைப் பார்க்கவே முடிவதில்லை. அப்படியே பார்த்தாலும் சரியா முகம் கொடுத்துப் பேச மாட்டேங்கறான்" என்றார் சித்தப்பா கவலையுடன். உடனே அருகிலிருந்த என் தம்பி, "சித்தப்பா முகத்தைப் பார்த்துத்தான் பேச முடியும். முகத்தைக் கொடுத்து எப்படி பேச முடியும்?" என்று அப்பாவியாகக் கேட்டான். சித்தப்பா திகைத்தார். நாங்கள் அனைவரும் சிரித்தோம்!

– ஏ. எல். பாத்திமா, காரைக்கால்.


ஒரு கேள்வி இரண்டு பதில்!

நானும் என் நண்பனும் அரட்டையடித்துக் கொண்டிருந்தோம். திடீரென என் நண்பன், "நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீ ரெண்டு பதில் சொல்லணும்" என்றான். நானும் சரி என்றேன். "உன் பெயர் என்ன?" என்றான். நான் "விஷ்வா வீரணசாமி" என்று என் பெயரையும் என் அப்பா பெயரையும் சேர்த்துச் சொன்னேன். "சரி! இப்ப ரெண்டு கேள்வி கேட்கறேன். ஒரு பதில் சொல்லணும்" என்றவன், "இந்தியாவின் பிரதமர் யார்? தமிழ்நாட்டின் முதலமைச்சர் யார்?" என்றான். சிறிது யோசித்துவிட்டு, "இந்தியக் குடிமகன்கள்" என்றேன். அவன் என்னைப் பாராட்டினான்.

– இரா. வீ. விஷ்வா, மதுரை.

ஸ்டம்ப்

அன்று விடுமுறை. நானும் நண்பர்களும் கிரிக்கெட் விளையாட மைதானத்திற்குச் சென்றோம். "சுரேஷ் ஊருக்குப் போயிட்டான். அதனால ஸ்டம்ப் இல்லை" என்றான் நண்பன் ஒருவன். உடனே நான், "இந்த மரத்தில் ஏறி குச்சிகளை உடைக்க வேண்டியதுதான்" என்றேன். உடனே நண்பன் ஒருவன் வேகமாக மரம் ஏறினான். நீண்ட



நேரம் ஆகியும் ஒரு குச்சியைக் கூட உடைத்துப் போடவில்லை. "என்னடா செய்யறே?" என்று கேட்டேன். "நானும் தேடிப் பார்த்துட்டேன். எல்லா குச்சிகளும் வளைஞ்சிருக்கு" என்றான். "வளையாமல் ஸ்டம்ப் மாதிரியா உட்கார்ந்து இருக்கும்! இருக்கிற குச்சியை உடைச்சுப் போடு" என்றவுடன், நண்பர்கள் அனைவரும் சிரித்தனர்.

– ஜெ. அன்பரசு, கீழ்ப்பென்னாத்தூர்.



கோகுலம் 2000





ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29				

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

செப்டெம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

பல்துலக்காதவனுக்கு உடலெல்லாம் – அது என்ன?



1) கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது – அது என்ன?

2) சிவப்பு நிற காளை நீரென்றால் பதுங்கும் காளை – அது என்ன?

3) போனவர் வந்தவர் காலில் மிதிபட்டாலும் போட்ட பாயை எடுக்க முடியாது – அது என்ன?

4) இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் – அது என்ன?

5) ஆடும் வரை ஆட்டம் ஆடிய பின் ஓட்டம் – அது என்ன?

6) அடிக்காமலே பிள்ளை அலறித் துடிக்குது – அது என்ன?

– சிவ நந்தினி
மேலகரம், தென்காசி.

விடை: 1) உப்பு 2) நெருப்பு 3) கோலம் 4) தேள் 5) இதயம் 6) சங்கு

1) சொம்பு நிறைய கம்பு! – அது என்ன?


2) ஒசோ உயர்ந்த மரம். உருவினால் தழை இல்லை – அது என்ன?

3) ஒரு பாட்டிலில் இரண்டு தைலம் – அது என்ன?

நாம் அறிந்த விஷயங்களுக்குப் புதுமையான வேறு பெயர்கள், ஏ. அன்பழகா, பக்-112. ரூ.21/- குட் புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், சென்னை – 40, விற்பனை உரிமை மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.

நாம் அறியாத ஏராளமான தகவல்களை இந்த நூல் திரட்டித் தருகிறது. உதாரணம் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரான யாசர் அராபத்தின் உண்மைப் பெயர் *'முகமது.' (பக்-16).* தாகூரின் புனை பெயர் 'பானு சின்ஹா'. *(பக்-46).* மலை ஏறுபவர்களுக்கென தயாரிக்கப்பட்ட கடிகாரத்தின் பெயர் 'ப்ரோ மாஸ்டர்'. *(பக்-63),* விம்பிள்டன் கோப்பையின் ஆரம்பகாலப் பெயர் 'டெமா செக்' *(பக்-90).* வினாடிவினா நடத்துபவர்களுக்கும் பொது அறிவில் ஆர்வம் கொண்டோருக்கும் இந்த நூல் உதவும்.

சிந்திய சிந்தனைகள், கவிஞர் நீலம் மதுமயன், பக்.172. ரூ.33/- இராமநாதன் பதிப்பகம், சென்னை –



14. விற்பனை உரிமை மணிமேகலை பிரசுரம், சென்னை – 17.


உலகத்தின் பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துக் களஞ்சியங்களை இதில் குவித்துத் தந்திருக்கிறார்கள். வள்ளுவர், அண்ணா, காந்தி என்று எல்லோரும் இதில் பொன்மொழிகிறார்கள். சிறந்த முறையில் கட்டுரை எழுத விழைவோருக்கும் மேடையேறி பேச்சால் சாதனை படைக்கத் துடிப்பவர்களுக்கும் இது பெரிதும் பயன்படும்.

பற்கள்

4) நாலு காலுண்டு, விச வாலில்லை. – அது என்ன?

– என். ரம்யா,
8–ஆம் வகுப்பு, சி–பிரிவு,
ராஜ்மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி,
கூரைநாடு, மயிலாடுதுறை.

விடை: 1) மாதுளம் பழம் 2) புகை 3) முட்டை 4) நாற்காலி



விடுகதைப் பக்கம்

1) விழிக்கும்வரை அமைதிமயம், விழித்து விட்டால் பிரளயம் – அது என்ன?

2) அழுவேன், சிரிப்பேன், அனைத்தும் செய்வேன், ஆனால், டி.வி. அல்ல! – நான் யார்?

3) வெள்ளித் தட்டைச் சுற்றி, வைரங்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், அவற்றை அள்ளி, வெள்ளித் தட்டில் கொட்ட, என்னால் முடியவில்லை! – அவை என்ன?

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
பன்னிரண்டாம் வகுப்பு, இமாம் கஸ்ஸாலி
மெட்ரிக் பள்ளி, லால்பேட்டை.

விடை: 1) எரிமலை 2) முகம் பார்க்கும் கண்ணாடி 3) நிலா, நட்சத்திரங்கள்

1) பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் – அவன் யார்?

2) மண்ணுக்குள் கிடப்பவன் மங்களமானவன் – அவன் யார்?

3) தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் – அவன் யார்?

4) தரையில் இருப்பான் தண்ணீரில் மிதப்பான் – அவன் யார்?

5) ஊரெல்லாம் ஒரே விளக்கு அதற்கு ஒரு நாள் ஓய்வு இருக்கும் – அது என்ன?

– கோ. பிரியா,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பெரியதச்சூர்

விடை: 1) சீப்பு 2) மஞ்சள் 3) இளநீர்-நுங்கு 4) படகு 5) நிலா




நன்மையில் முடிந்த நாரதர் கலகங்கள், எஸ்.எஸ். வாசன். பக்–92. ரூ. 18/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை – 17.

நாரதர் பங்கு கொள்ளும் புராண நிகழ்ச்சிகள் மிகவும் சுவையாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வால்மீகி முனிவருக்கு அப்பெயர் வந்த காரணம், கும்பகர்ணனின் பெருந் தூக்கத்திற்குக் காரணம் போன்ற பல சுவையான செய்திகளைப் புத்தகம் தருகிறது. நாரதர் எங்கும் தங்காமல் திரிந்தபடி இருப்பதற்குரிய காரணமும் தரப்பட்டுள்ளது. சில கதைகள் மேல் வகுப்பு மாணவர்களுக்கே ஏற்றவை. பெற்றோர் படித்துக் குழந்தைகளுக்குக் கூறி மகிழ்விக்கலாம்.

— ரே

7 கானகத்தினுள்ளே...

பரிசல் போன்ற அந்தப் படகு துங்கபத்ரா நதியின் ஓட்டத்தை எதிர்த்து மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டிருந்தது. பரிசலில் சாக்கு மூட்டைகளும் காய்கறிக் கூடைகளும் அடுக்கப்பட்டிருந்ததினால் நீரைக் கிழித்துக்கொண்டு வேகமாக முன்னேற முடியவில்லை. கட்டுமஸ்தான அந்த வாலிபனின் முறுக்கேறிய உடலை, வியர்வை குளிப்பாட்டி, மினுமினுக்கச் செய்து கொண்டிருந்தது. கோலை நீரில் பாய்ச்சி, படகை உந்தும் அவன் லாகவத்தைப் பார்த்து வியந்து கொண்டிருந்தான் சத்யா. நதியோரத்து கானகத்தின் அழகையும் பறவைக் கூட்டங்கள் இனிய ஒலி எழுப்பி திடீரென்று கிளம்பி வட்டமடித்து மீண்டும் கானகத்தினுள் மறையும் விந்தையையும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் நித்யா.



பார்வை இயற்கைக் காட்சிகளில் லயித்திருந்தாலும் நித்யாவின் உள்ளம் தந்தையைப் பற்றிய கவலையிலேயே நிறைந்திருந்தது. "எப்போது - எப்படி அப்பாவைக் காணப் போகிறோம்? அரங்கநாதன் கூறினாரே அந்த சீதாராம ரெட்டியின் இருப்பிடம் எங்கிருக்கிறது? அவரை எப்படி சந்திக்கப் போகிறோம். டாடியை விடுவிக்க அவர் உதவுவாரா? நம்மோடு இப்போ அரங்கநாதன் சார்கூட இல்லையே...!" என்றாள் நித்யா.

"கவலைப் படாதே அக்கா. நாம் அந்த ரௌடிகளிடமிருந்து தப்பி விட்டோம். அதிர்ஷ்டம் நம் பக்கமிருக்கிறது. அரங்கநாதன் சாரோட பண்ணை வீட்டில், அவர் ஒரு மேப்பைக் காட்டி விளக்கினாரே அது என் மனதில் அப்படியே போட்டோ படம் போலப் பதிஞ்சிருக்கு. சீதாராம ரெட்டி காருவோட இடத்தை நாம் கண்டுபிடிச்சுடலாம்..." என்று சத்யா தன் அக்காவுக்குத் தைரிய மூட்டிக் கொண்டிருந்த வேளையில்... தொலைவில் வினோதமான ஓர் ஒலி கேட்டது.

"என்னது... சத்தம்? ... விமானம் போல இல்லே?" என்றாள் நித்யா.

உற்றுக் கேட்ட சத்யா "விமானமில்லே அக்கா... ஹெலி

தங்கச்சிலை

காப்டர்...!'' என்றவன் கண்களை இடுக்கிக்கொண்டு வானத்தை ஆராய்ந்தான். அவன் ஊகம் சரிதான். ஆற்றோட்டத்தில் மிதக்கும் பரிசல் படகை நோக்கி வந்து கொண்டிருந்தது ஒரு ஹெலிகாப்டர். ''அரங்கநாயகம் சார் சொன்னது நினைவிருக்கா நித்யா - அதிகார

வர்க்கம் ஜெயராஜோட மணிபர்ஸுக்குள் அடக்கம்னு சொன்னாரில்லே. ஹெலிகாப்டரிலே நம்மைத் தேடுவது ஜெயராஜ்தான்... அவனுக்கு இது ரொம்ப சுலபம்... அவன் கண்ணில் படாமல் நாம் இந்த மூட்டைகளுக்கிடையில் பதுங்கிக் கொள்வோம்'' என்று கூறி இரு மூட்டைகளுக்கிடையே முடங்கிக்கொண்டு ஒரு சாக்கினால் தன்னை மூடிக்கொண்டான். நித்யாவும் அவனைப் பின்பற்றினாள். ஆனால் அந்தச் சாக்கினால் தந்தம் போன்ற நான்கு



கால்களை மூட முடியவில்லை!

படகுக்கு மேலாக - தாழ்வாகப் பறந்து வந்தது ஹெலிகாப்டர். கிழவியும் வாலிபனும் வியப்போடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சாக்கு மூட்டைக்குள் இருந்த சத்யா - அதிலுள்ள ஒரு கிழிசல் மூலம் நோட்டமிட்டவன் பீதியுடன் நித்யாவிடம் கூறினான். ''அக்கா! ஹெலிகாப்டரிலே அந்த குண்டன் ஜெயராஜோட ஆள் இருக்கான். கையிலே செல்லுலார் போன் வேற!''

வாண்டுமாமா

"இப்ப நாம என்னடா செய்யறது...? மறுபடியும் அவன்கிட்ட சிக்கினால் – நம்மால் தப்பவே முடியாதே சத்யா...!" ஒன்றும் புரியாமல் குழம்பிப் போனாள் நித்யா.

"நம் கால்களை அவன் பார்த்துட்டான்னு தெரியுது. ஜெயராஜுக்கு போன் மூலம் தகவல் சொல்லிடுவான். ஜெயராஜ் மோட்டார் படகிலே நம்மைப் பிடிக்க வருவான். நாம் இந்தப் படகிலேயிருந்து வெளியேறி, காட்டுக்குள்ளே ஓடித் தப்பியாகணும்."

"காடு! எட்ட இருந்து பார்க்கக் குஷியா இருக்கு. ஆனா அதுக்குள்ளே புகுந்து ஓடணும்னு நினைத்தாலே பயமா இருக்கே சத்யா..."

"வேற வழியே இல்லே நித்யா – அந்த ரெண்டி கையில் சிக்குவதை விட, காட்டுக்குள் ஓடுவது மேல்... யோசிக்காதே... ஹெலிகாப்டர் ரவுண்டடிச்சுத் திரும்பறது. அந்த முரடன் ஜெயராஜ் விசைப் படகிலே வரத்துக்குள்ளே நாம் இந்தப் பரிசலை விட்டு வெளியேறிடணும். படகை கரைக்கு ஒதுக்கும்படி அந்தப் பாட்டிகிட்டே வேண்டிக்கோ, சிக்கிரம்" பரபரத்தான் சத்யா.

கிழவியை அதற்குச் சம்மதிக்க வைப்பது அத்தனை சுலபமாக இல்லை. முதலில் நித்யா என்ன சொல்கிறாள் என்றே கிழவிக்குப் புரியவில்லை. தங்களைக் கரையில் இறக்கி விடுமாறு கெஞ்சுகிறார்கள் – கேட்கிறார்கள் என்பதை ஒருவழியாகப் புரிந்துகொண்ட கிழவி, என்னவென்று தெரியாமல் 'காட்டுக்குள்ளே எப்படிப் போவீங்க... துஷ்டமிருகங்கள் எல்லாம் இருக்குமே – ஆபத்து' என்று மறுத்தாள். ஆனால் சத்யாவும் நித்யாவும் கிழவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு மன்றாடிக் கெஞ்சிக் கூத்தாடவே, கிழவி விருப்பமின்றி, பரிசலைக் கரைக்கு ஒதுக்குமாறு வாலிபனிடம் கூறினாள்.


கோல் போட்டுப் பரிசலை நீரில் நிலை நிறுத்துமுன் குழந்தைகள் இருவரும் நதி நீரில் குதித்து – இடுப்பளவு வெள்ளத்தில் – காட்டுக்குள் ஓடினார்கள். கிழவி அவர்களின் செயலுக்காக அங்கலாய்த்துக் கொண்டாள்.

"நதிக்கரையோரமாவே போகலாம் சத்யா – காட்டுக்குள்ளே போக வேண்டாம் – வழி தெரியாமப் போயிடும்..." என்றாள் நித்யா.

"நல்ல யோசனைதான்... சீதாராம ரெட்டி காருவோட ஜமீன் நதிக்கரை யோரமாத்தான் இருக்கு..." என்று கூறியபடி நடக்கலானான் சத்யா... ஜன நடமாட்டம் அதிகம் இல்லாததால் ஒற்றையடிப் பாதை கூட உருவாகவில்லை. சருகுகள் பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடிகள் மீது நடந்து செல்லுவது சிரமமாக இருந்தது. இவர்கள் காலடியோசை கேட்டு அரணைகள், ஓணான்கள், தவளைகள் மிரண்டு தாவி ஓடுவது இவர்களையும் திகிலடையச் செய்தது. அனுபவமில்லாததினால் சிறிது நேரத்திலேயே களைத்துப் போய் விட்டார்கள். நதியின் மீது வளைந்தபடி தழைத்திருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்து – கால்களை நதி நீரில் தொங்க விட்டபடி ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தபோது, தூரத்தில் மோட்டார் போட்டின் ஓசை கேட்டதும் பதறிப் போனார்கள்.

"நான் சொல்லல்லே – ஜெயராஜ் விசைப் படகில் நம்மைத் தேடி வருவான்னு... அந்த மோட்டார் படகு அவனோடதுதான்... ஒரு பெரிய மரத்தின் அடிவாரம் நீரிலே மூழ்கியபடி இருப்பதைப் பார்த்தேன். அதன் பின்னாலே போய் மறைஞ்சுக்கலாம், வா" என்று நித்யாவின் கையைப் பற்றியபடி ஓடினான் – நீரில் மூழ்கிக் கிடக்கும் அடிமரத்தை நோக்கி. மார்பளவு நீரில் அந்த மரத்தின் பின்னால் மறைந்துகொண்டு நதியை நோட்டமிட்டார்கள். கரையோரத்து மரங்களின் கிளைகள் வளைந்து தழைந்து இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தன. மோட்டார் படகு இவர்கள் பதுங்குமிடத்தருகே வந்தபோது இருவரும் நீருக்குள் தலையை முக்கிக்கொண்டார்கள். ஓலமிட்டபடி விசைப்படகு அப்பால் போன பிறகே தலையை நீரிலிருந்து வெளியே நீட்டி மூச்சு வாங்கினார்கள்.

"நல்லவேளை! கொஞ்ச நேரம் சுத்திப் பார்த்துட்டு – நம்பிக்கை இழந்து திரும்பிப் போயிடுவாங்க நித்யா – நீ கவலைப் படாதே... இந்த இடம் ஜில்லுனு 'கூலா' இருக்கில்லே... கரையோரமா இந்தக் கட்டை மேலே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்



"உன்னை மாதிரியே ஒருத்தனைப் பார்த்தேன்டா..."
"எந்த இடத்துல?"
"ஸெராக்ஸ் கடையில!"

– எஸ். மாலதி

போமா ,நனைந்த உடைகளைக் காயப் போட்டபடி...'' என்றான் சத்யா.

''வேண்டாம் சத்யா... நடந்தால் உடைகள் உடம்போடு காய்ந்து விடும்... இங்கு தாமதிப்பது அபாயம்... கிளம்பு...!'' என்றாள் நித்யா. இருவரும் நீரிலிருந்து கரையேறி, உடைகளை முறுக்கிப் பிழிந்தனர். ''இன்றைக்குக் குளியல் முடிந்தது. வெயிலில் உடைகளும் காய்ந்து விடும்'' என்றவள், தாங்கள் உட்கார யோசித்த மரக்கட்டை நகருவதை - நீருக்குள் நழுவுவதை - கண்டு 'வீல்'என்று கத்த முற்பட்டு உடனே கைகளால் தன் வாயை மூடிக் கொண்டாள். ஒரு பெரிய முதலை வாயை அகலத் திறந்தபடி அங்கு...

'ஏய்ய்... சத்யா... நீ... கட்டைன்னு சொன்னது கட்டை இல்லே முதலை!''

அதைக் கண்ட சத்யாவின் வாய் உலர்ந்து போனது. ''ம...மரக்கட்டை போலவே இருந்தது நித்யா!'' அந்தக் குளிர்ச்சியிலும் அவன் உடல் குப்பென்று வியர்த்தது.

''அது மேலே உட்கார்ந்து இளைப்பாறலாம்னு ஆசைப்பட்டியே. அப்படி உட்கார்ந்திருந்தா என்ன ஆகியிருக்கும்?''

பயம் தெளிந்த நிலையில் சத்யா ஜோக் அடித்தான்: ''நல்லவேளை ஆண்டவன் அதன் வாயை முதுகில் வைக்கவில்லை...!''

இருவரும் நதிக்கரையிலிருந்து நகர்ந்து கானகத்தின் உள் பகுதியை நோக்கி நடக்கலானார்கள். மண்டிக் கிடக்கும் கிளைகளை ஒதுக்கிக்கொண்டு சிறிது தூரம் முன்னேறிய போது உறுமல் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு ஒரு புதர் மறைவில் ஒதுங்கினார்கள்.

கூப்பிடு தூரத்தில் ஒரு சிறுத்தை தன் நீண்ட வாலை இப்படியும் அப்படியும் ஆட்டியபடி, உளிப் பற்களை அடிக்கடி திறந்து காட்டியபடி நின்று கொண்டிருந்தது. காதுகளை விரைப்பாக்கிப் பின்னுக்குத் தள்ளியபடி கோபமாக அது நின்ற நிலை கண்டு, மோப்ப சக்தியினால் தங்களை அது தெரிந்து கொண்டது என்பதை நித்யாவும் சத்யாவும் புரிந்து கொண்டார்கள். ஓடினால் அது துரத்தும். அப்படியே நின்றாலோ எந்த விநாடியும் அது தங்கள் மீது பாயும். என்ன செய்வது என்று புரியாமல் பிரமிப்பில் இதயம் படபடக்க இமைக்கவும் தோன்றாமல் அப்படியே சிலையாக நின்றார்கள்-சிறுத்தையின் பாய்ச்சலை எதிர்பார்த்து.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. வாள் வீச்சைப் போல் 'உஷ்' என்றொரு ஒலி கேட்டது. தன் பார்வையினால் நிலை குலைய வைத்து, தாக்கி வீழ்த்தும் தருணத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த கரும் பொட்டுடல் கொண்ட சிறுத்தை ஏதோ தாக்கியதைப் போல மிரண்டு, நாலு கால் பாய்ச்சலில் வேறு திசையில் ஓடியது. அப்படி அது ஓடிய எதிர்த் திசையில் மரக் கிளைகள் சலசலக்க ஒரு காட்டுவாசிப் பையன் - சத்யா, நித்யா இருவர் முன்னாலும் குதித்து நின்றான். மூச்சுக்கட்டி, முடிவை எதிர் பார்த்து நின்ற குழந்தைகள் இருவரும் நிம்மதிப் பெருமூச்சை அவிழ்த்துவிட்டு அந்தப் பையனைப் பார்த்தார்கள் திகைப்போடு.

அந்தக் காட்டுவாசிப் பையனுக்கு சத்யாவின் வயதுதானிருக்கும். கருங்காலி மரத்துக்கு எண்ணெய் தடவியது போன்ற உடல், இளம் வெயிலில் பளபளத்தது. கழுத்திலே, கிளிஞ்சல்களும் சோழிகளும் கோர்த்த மாலைகள் அணிந்திருந்தான். இடையிலே வேங்கைப் புலியின் - இல்லே சிறுத்தையினுடையது

ஓவியப் போட்டி

இந்த மாதத் தலைப்பு: பொங்கல். பொங்கல் என்றதும் உங்கள் நினைவுக்கு வரும் வண்ணப் பானை, கரும்பு, மாடு இப்படி... பலவற்றையும் வரையலாம். ஆனால் படத்தை வண்ணம் தீட்டி அனுப்ப வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி 20.1.2000





தானோ? – தோலாடை பாதித் தொடை வரை. தோளிலிருந்து தொங்கியது ஒரு தோல் பை. இரு புஜங்களிலும் வண்ண மணிகளைக் கயிற்றில் கோர்த்துக் கட்டிக் கொண்டிருந் தான். அது அவன் உடல் வலுவை உணர்ஜிதப் படுத்தும்படி இருந்தது. மேல் நெற்றியில் ஒரு துணிப் பட்டையை தலையைச் சுற்றிக் கட்டி யிருந்தான். முடி போட்ட அதன் இரு முனை களும் இடது பக்கக் காதோரத்தில் தொங்குவது அழகாகவே இருந்தது. வியர்வை வழிந்து பார் வையை பாதிக்காதிருப்பதற்காகவே அந்தத் துணிப் பட்டையைக் கட்டிக்கொண்டிருக் கிறான் என்பதை சத்யா புரிந்துகொண்டான்.

அந்தக் காட்டுவாசிப் பையன், தன் வெண் முத்துப் பற்கள் பளபளக்க "ஹூ ஆர் யூ?" என்று கொச்சை ஆங்கிலத்தில் கேட் டது நித்யாவையும் சத்யாவையும் பிரமிப் பில் ஆழ்த்தியது.

அவர்கள் திகைப்பைத் தெரிந்து கொண் டவன் "நான் இங்கிலிஷிலே பேசறதைப் பார்த்துத் தானே ஆச்சரியப் படறீங்க? காட்டுவாசியான நான் வளர்ந்தது ஒரு பாதிரி யார் வீட்டிலே... அது ஒரு கதை. உங்க உடை யைப் பார்த்ததும், நீங்க கான்வெண்டிலே படிக்கிறவங்கன்னு புரிஞ்சது. என் பாஷை யிலே பேசினா உங்களுக்குப் புரியாது. நான் பாதிரியார் வீட்டிலே கத்துக்கிட்ட அவங்க பாஷையை எங்க சனங்ககிட்ட பேசினா அவங்களுக்குப் புரியாது. அதான் உங்களைக் கண்டதும் ஆங்கிலத்தில் பேசி னேன்" என்றான் அந்தப் பையன். பட்லர் இங்கிலீஷ் என்பார்களே அந்தமாதிரி இருந்தது அவன் ஆங்கிலப் பேச்சு. ஆனாலும் சத்யாவும் நித்யாவும் புரிந்து கொண்டார்கள்.

"நீ அந்தச் சிறுத்தையை எப்படி விரட்டினே...?" என்று கேட்டான் சத்யா.

"இதனாலே..." என்று தன் கையிலிருந்த நாணல் குழாயையும் இடையில் தொங்கிய தோல் பையிலிருந்து, முள்ளோடு கூடிய கறுப் பான ஒரு தானிய மணியையும் காட்டினான் காட்டுவாசிப் பையன்.

"இது... இதனாலா? வெறும் நாணல் குழாய்தானே இது... இதனால் எப்படி....?"

"இது வெறும் நாணல் குழாயில்லே – ஊது கணைக் குழல் இது. புளோ பைப். இந்த முள்ளுமணி இருக்கே, இது விஷம் தடவினது... குழாய்க்குள்ளே இதைப் போட்டு வேகமா குறிப் பார்த்து ஊதினேன். விஷ முள் சிறுத்தை உடலில் பாய அது ஓட்ட மெடுத்தது" என்றான் காட்டுச் சிறுவன்.

– தொடரும்



புவிமுதல் திருநாள்!

உலகில் மனிதன் தோன்றிய நாள்முதல்
உணவின் தேவையும் தோன்றியது!
உணவின் தேவை தோன்றிய நாள்முதல்
உழவுத் தொழிலும் தோன்றியது!

இலங்கும் அரிய தொழில்கள் யாவிலும்
ஏர்த்தொழில் முதலில் தோன்றியது!
'ஏரின் பின்னது உலகம்' எனும்குறள்
இதனால் தமிழில் தோன்றியது!

அதிநல் விளைச்சல் ஆகிய நாள்முதல்
அறுவடைத் திருநாள் தோன்றியது!
அதற்கென உழைத்த எருதுக்கு நன்றியை
அறிவிக்கும் திருநாள் தோன்றியது!

புதுநெல் குத்திப் பொங்கல் படைத்துப்
பூஜிக்கும் திருநாள் தோன்றியது!
புகழ்நாள் புவியின் திருநாள் யாவிலும்
'பொங்கல்' முதலில் தோன்றியது!

— தளவை இளங்குமரன்



I ஒரு பால் வியாபாரியிடம் 30 பசு மாடுகள் இருக்கின்றன. அவற்றுள் 10 மாடுகள் தலா தினம் ¼ லிட்டர் பாலும், 10 மாடுகள் தலா ¾ லிட்டர் பாலும், மீதமுள்ள 10 மாடுகள் தலா இரண்டு லிட்டர் பாலும் கறக்கக்கூடியவை. அவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் இந்த 30 பசுக்களை தலா 10 பசுக்கள் வீதம் 10 லிட்டர் பால் கிடைக்கும் வகையில் பிரித்துக் கொடுக்க எண்ணுகிறார். எவ்வாறு பிரிக்கலாம் என்பதில் நீங்கள் அவருக்கு உதவுங்கள் பார்க்கலாம்!

– பெ. இராமசாமி,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை.

கண்டுபிடியுங்கள்!

II ஏதாவது ஒரு எண்ணை உங்கள் நண்பரை நினைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். முதலில் அந்த எண்ணை ஐந்தால் பெருக்கி ஐந்து கூட்டச் செய்ய வேண்டும். கூட்டி வந்த எண்ணை இரண்டால் பெருக்கி இரண்டு கூட்டச் செய்ய வேண்டும். இப்பொழுது வந்த எண்ணில் இரண்டை மறந்து விட்டு மற்ற எண்ணில் இருந்து ஒன்றை கழிக்க வேண்டும். இப்பொழுது அவர்கள் நினைத்த எண்ணைக் கண்டுபிடித்து விடலாம்.


– தி. நடேஷ்ராணி,
திருவிடைமருதூர்.



எத்தனை மூட்டைகள்?

தலைகீழாக...

III 50 காசு நாணயங்கள் முக்கோண வடிவத்தில் கீழே வைக்கப்பட்டுள்ளன.



மூன்றே நாணயங்கள் மாற்றம் செய்வதன் மூலம், அதை தலைகீழான முக்கோணமாக உருவாக்க முடியுமா?

– எ. எல். சாதிக், காரைக்கால்.

எத்தனை மூட்டைகள்?

IV ஒருமுறை மூன்று தோணிகளில் அரிசி மூட்டை ஏற்றி அனுப்பப்பட்டது. முதல் தோணியை அருணும், இரண்டாவது

தோணியை குகனும், மூன்றாவது தோணியை மதனும் ஓட்டிச் சென்றனர். முதல் தோணிக்காரன், இரண்டாவது தோணிக்காரனை கூவி அழைத்து என்னுடைய தோணியில் பாரம் அதிகம் இருப்பதனால் என்னிடமிருந்து சில மூட்டைகளை வாங்கிக் கொள் என்றான்.

உடனே இரண்டாவது தோணிக்காரனான குகன் என் தோணியில் எவ்வளவு மூட்டைகள் இருக்கிறதோ அவ்வளவே வாங்கிக் கொள்வேன் என்று கூறி அதன் படியே வாங்கிக் கொண்டான்.

பின், இரண்டாவது தோணிக்காரனான குகன், மூன்றாவது தோணிக்காரன் மதனை கூவி அழைத்து தன்னிடமுள்ள மூட்டைகளில் சிலவற்றை வாங்கிக் கொள்ளும்படி கேட்டான்.

மூன்றாவது தோணிக்காரன் மதனும் தன் தோணியில் எவ்வளவு மூட்டைகள் இருக்கின்றனவோ, அவ்வளவே வாங்கிக் கொண்டான்.

பின்னர் மூன்று தோணிகளிலும் மூட்டைகள் சரிசமமாக இருந்தன. அப்படியென்றால் முதன் முதலில் ஒவ்வொரு தோணியிலும் இருந்த அரிசி மூட்டைகள் எத்தனை?

விடையை உடனடியாகக் கூறுங்கள் பார்க்கலாம்!

– சிவ. மணவழகி, நாகை.

V *0*–வில் இருந்து 9 வரை உள்ள எண்களைப் பயன்படுத்தி ஒரு கூட்டல் கணக்குப் போட வேண்டும். ஆனால், அந்தக் கணக்கில் 0–வில் இருந்து 9-வரை உள்ள அனைத்து எண்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். எப்படி தெரியுமா?

– எம். எஸ். உம்மு அம்மாரா, லால்பேட்டை.

விடைகள் :

I

	¼லி	¾லி	2 லி
மூத்தவர்	5	1	4 = 10
இரண்டாமவர்	5	1	4 = 10
மூன்றாமவர்	-	8	2 = 10
	10	10	10 = 30

II நினைத்த எண் : 5

5 X 5 பெருக்க வேண்டும். 25 வரும்.

25+5 = 30

30 X 2 = 60

60+2 = 62

62–ல் இரண்டை மறந்து விட வேண்டும். 6 தான் மிச்சம்.

6 – 1 = 5

III முதலில் நான்காம் வரிசையிலுள்ள முதல் நாணயத்தையும் நான்காவது நாணயத்தையும் எடுத்து இரண்டாம் வரிசையில் முதலாவதாகவும் நான்காவதாகவும் வைக்க வேண்டும். பிறகு முதல் வரிசையிலுள்ள ஒரேயொரு நாணயத்தை எடுத்து, நான்காம் வரிசைக்குக் கீழே நடுவில் வைக்க வேண்டும்.

IV மொத்த அரிசி மூட்டைகள் = 12.

அருண் வசம் – 7 அரிசி மூட்டைகள்
குகன் வசம் – 3 அரிசி மூட்டைகள்
மதன் வசம் – 2 அரிசி மூட்டைகள்

அருண்	குகன்	மதன்
7	3+	2+
- 3	3	2
4	6 -	4
	2	
	4	

ஒவ்வொருவரிடமும் சமமாக 4 அரிசி மூட்டைகள்.

V

$$\begin{array}{r} 637 \\ 452 \\ \hline 1089 \end{array}$$

அழகான கழுதை!

கதை: எஸ். பி. சோமநாத்சர்மா, ஏழாம் வகுப்பு,
ஏ.எல்.எம். மெட்ரிகுலேஷன் பள்ளி, ஈஞ்சம்பாக்கம்.

படம்: சசி




இதைப் பார்த்த சிற்பி குச்சியால் மெதுவாகக் கழுதையைத் தட்டினார்.
'எஜமான் கூட பாராட்டி முதுகில் தட்டுகிறாரே' என நினைத்த கழுதை இன்னும் சத்தமாகக் கத்தியபடி ஆடியது.
கழுதையின் திடீர் நடவடிக்கையைக் கண்ட சிற்பி சிலையை எடுத்துக் கொண்டு நடந்தார்.
கழுதை மிகவும் சந்தோஷத்துடன் குரலெழுப்பியபடி ஊருக்குள் ஓடியது.
''யாராவது இந்தக் கழுதையை விரட்டுங்க. இப்படிக் கொடூரமாய்க் கத்துகிறதே'' என்றார் ஒரு பெரியவர்.
அவ்வளவுதான்! எல்லோரும் சேர்ந்து கழுதையை விரட்ட ஆரம்பித்தனர்.
'கொஞ்ச நேரம் முன்பு வரை பாராட்டிய மக்கள் இப்ப விரட்டறாங்களே! ஏன்?' என்று நினைத்தபடி ஓடியது கழுதை.
ஊர் எல்லையை அடைந்த கழுதை சிறிது நேரம் நின்று யோசித்தது. உண்மை புரிந்தவுடன் சிற்பி வீட்டை நோக்கி நடந்தது.

ஈயை அடி!

ஆங்கில பாடவேளை. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது ஒரு வார்த்தையில் அதிகமாக 'e' என்ற எழுத்து இடம் பெற்று விட்டது. உடனே ஆசிரியர் ''ஒரு ஈயை அடித்து விடுங்கள்'' என்றார். எல்லோரும் அடித்தோம். ஒரு மாணவன் மட்டும் திரும்பி எதையோ தேடிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பிய ஆசிரியர் ''என்ன பண்ணிக்கிட்டிருக்கே?'' என்று கேட்டார். ''சார் நீங்க ஈயை அடிக்கச் சொன்னீங்க. ஆனால் ஒரு ஈயும் இங்கே பறக்கலை'' என்றானே பார்க்கலாம்! நாங்கள் அனைவரும் அடக்க முடியாமல் சிரித்து விட்டோம். ஆசிரியரோ கடுங்கோபத்தில் இருந்தார்.

– ஆர். செந்தில்குமுருகன்,
பன்னிரண்டாம் வகுப்பு, மறவன்பட்டி.





திருக்குறள்

தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென ஒவ்வொரு மாணவனையும் எழுப்பி ஐந்து திருக்குறள்களைச் சொல்லச் சொன்னார். எல்லோரும் வரிசையாகச் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவன் சொல்லாமல் நின்றான். உடனே ஆசிரியர் ''நீ பஸ்ஸில் தானே பள்ளிக்கூடம் வர்றே! நாளைக்கு வரும்போது பஸ்ஸில் எழுதியிருக்கிற ஒரு குறளையாவது மனப் பாடம் செய்துகிட்டு வரணும்'' என்று கூறி உட்கார வைத்தார். மறுநாள் அவனிடம் ஒரு குறளைச் சொல்லச் சொன்னார். அவன் எழுந்து ''சரியான சில்லரை கொடுத்து டிக்கெட்டைக் கேட்டு வாங்க வேண்டும்'' என்றான். ஆசிரியர் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''பள்ளி முடிந்ததும் என்னிடம் வா. சொல்லிக் கொடுக்கறேன்'' என்றார்.

– என் சௌந்தர்,
தாரமங்கலம்.


வருது, வருது!

பள்ளிக்கு சீக்கிரமாகவே வந்து விட்டோம். பல குழுக்களாக நின்று மைதானத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது நீண்ட நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் விடுமுறையில் இருந்த ஆதி என்ற மாணவி அன்று பள்ளிக்கு வந்து கொண்டிருந்தாள்.



யாரைப் பிடிக்கும்?

ஆசிரியர் பாடம் நடத்தி விட்டு நேரம் கிடைக்கும்போது பொதுவான விஷயங்கள் பற்றிப் பேசுவார். ஒரு நாள் "நம் பள்ளியில் உங்களுக்கு யாரைப் பிடிக்கும்? தயங்காமல் உண்மையைச் சொல்லலாம்" என்றார். நிறைய மாணவர்கள் அந்த ஆசிரியரையும், சிலர் வேறு ஆசிரியர்களையும் சொன்னார்கள். ஒரு மாணவன் எழுந்து "எனக்கு நம்ம பள்ளிக்கூட பியூனைத்தான் பிடிக்கும் சார்" என்றான். ஆசிரியரோ சந்தோஷத்துடன் "வித்தியாசமா சொல்லியிருக்கே! பியூனைப் பிடிக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார். "சார்! அவர் தானே வீட்டுக்குப் போக மணி அடிக்கிறார்" என்றானே பார்க்கலாம்! ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.



– அன்னை. பாக்யா,
நல்லாடை ரோடு,
செம்பனார்
கோயில்.

நான் உடனே மகிழ்ச்சியுடன் "ஏய் ஆதி வருது" என்றேன். என் தோழிகள் உடனே ஓட்டம் பிடித்தனர். நான் அவர்களைத் துரத்தி "ஏன் ஓடறீங்க?" என்றேன். "நீதானே ஆவி வருதுன்னு சொன்னே. அதனாலதான் ஓடறோம்" என்றனர். "ஐயோ! நான் சொன்னது நம் ஆதி வர்றா பாருங்க" என்றேன். பிறகுதான் அமைதியானார்கள்.

– ஜி. ராஜேஸ்வரி,
பத்தாம் வகுப்பு,
அரசு மகளிர்
மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.



டீ.வி. இருக்கா?

அறிவியல் பாட வேளை. ஆசிரியர் என் நண்பனிடம் கேள்வி கேட்டார். அவன் திருதிருவென விழித்தான். ஆசிரியர் அவனிடம் "உங்க வீட்டில் டீவி. இருக்கா?" என்று கேட்டார். "ஆமாம்" என்று பதில் சொன்னான். உடனே "அதானே பார்த்தேன்! டீவி. பார்த்துட்டு இப்படி படிக்காமல் வந்து நிற்கிறியா?" என்றபடி பிரம்பை எடுத்தார். "டீச்சர்! டீவியும் பார்க்க முடியலை. புத்தகத்தையும் படிக்க முடியலை. எனக்கு ரெண்டு நாளா கண் வலி" என்றான். "இதை முதலிலேயே சொல்லக் கூடாதா?" என்றபடி உட்கார வைத்தார் ஆசிரியர்.

– எஸ்.எஸ்.கே.எஸ்.
தங்கராஜ்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
கீழச்செக்காரக்குடி.





AFTER SCHOOL, WHAT?

The century that was....

``I am not bad''

- Short story

CALENDAR 2000


Rs.6/-

January 2000

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97

The monthly magazine for children

GOKULAM



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

தனுஷ் வார்டு எங்கே?

முகம்மது ஹில்மி

பள்ளிக்கூடம் முடிந்தது. ராஜா தன் நண்பர்களுடன் நடக்கத் துவங்கினான்.

மருத்துவ மனையின் நுழைவாயில் வந்தது. அது தான் அவர்களின் வழக்கமான வழி.

மருத்துவமனையின் முன்பாக ஒரு பெரிய மைதானம். நடுவே ரவுண்டானா பூங்கா. அதன் அருகே ஒரு சிறு கூட்டம்.

ராஜாவின் கவனம் அங்கே சென்றது. 'டேய், அங்கே பாருங்கடா. சிறு கூட்டம் தெரிகிறது. என்னவாக இருக்கும்?' என்று கேட்டவாறே நண்பர்களுடன் அங்கே விரைந்தான்.

கூட்டத்தின் நடுவே ஒரு முதியவரும் மூதாட்டியும் உட்கார்ந்து இருந்தார்கள். இயலாமையும் சோர்வும் அவர்களின் முகங்களில். சொல்லமுடியாத கவலை அவர்களின் கண்களில்.

விரைந்து வந்த மாணவர் குழுவைப் பார்த்ததும் கூட்டத்தில் நின்ற ஒருவர் திரும்பினார். அவர் கையில் தெர்மாஸ் குடுவை. யாருக்கோ டீ வாங்கச் செல்லும் அவசரத்தில் இருந்தார்.

"தம்பிகளா! பாவம் இந்த முதியவர்கள். அவர்களின் உறவினர் ஒருவர் இந்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறாராம். அவரைப் பார்ப்பதற்கு இங்கு வந்திருக்கிறார்கள். உறவினர் எந்த வார்டில் உள்ளார் என்பதை இவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. மருத்துவமனையைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். களைப்பு அதிகமானதால் இங்கு உட்கார்ந்திட்டாங்க. தம்பி, நான் அவசரமா போறேன். இந்தப் பரிதாபத்திற்குரிய முதியவர்களுக்கு அவர்களின் உறவினர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்க முடியுமா? உங்களுக்குப் புண்ணியமாகும்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அந்த முதியவர்கள் தங்களின் நிலையை எடுத்துச் சொல்வதற்குக் கூடச் சக்தியற்றவர்களாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

ராஜா மனம் இளகினான். தன் நண்பர்களை ஒன்று திரட்டினான். யாஸிர், லோபஸ், ஜமால், பழனி அவனோடு சேர்த்து மொத்தம் ஐந்து பேர்கள்.

நண்பர்களுடன் ஆலோசனை செய்தான்.

யாஸிரும், லோபஸும் வீடு சென்று தேனீர் குடித்துவிட்டு உடனே டியூஷன் செல்ல வேண்டும். ஜமால் தியாகராயநகர் செல்ல வேண்டும். சிறிது தாமதம் ஆனாலும் அம்மா கவலையோடு தேட ஆரம்பித்து விடுவார். பழனி அன்பு நகர் செல்ல வேண்டும். ராஜனுக்கு என்னவோ ஹவுஸிங் காலனியில்தான் வீடு. என்றாலும் அம்மாவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போக வேண்டும்.

ஆக யாரும் இங்கே அதிக நேரம் தாமதிக்க முடியாது.

ஆனால், எல்லோரும் ஏகமனதாக உதவி செய்ய முன் வந்தார்கள்.

"மருத்துவமனை கடல் போல் பரந்து கிடக்கிறது. இதில், அந்த நோயாளியை எங்கு சென்று எப்படித் தேடுவது" என்றான் ஜமால் கவலையோடு.

"ஆமாம்டா. ஒவ்வொரு வார்டா போய்த் தேடினால் இன்று பூராவும் தேடினாலும் முடியாது. என்ன செய்யலாம்டா?" என்றான் லோபஸ்.

"முதலில் அந்த முதியவரிடம்

தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறுவோம்'' என்றான் ராஜா.

எல்லோரும் முதியவர் பக்கம் திரும்பினர்.

"பெரியவரே, உங்கள் உறவினர் பெயர் என்ன?''

"யூசுப்'' என்றார்.


"எப்பொழுது இங்கு வந்து சேர்ந்தார்?''

"எனக்குத் தெரியலே. இரண்டு மூன்று

நண்பர்களின் முகங்களில் சற்றுத் தெளிவு பிறந்தது.

நோய் என்ன என்று தெரிந்தால் வார்டு என்ன என்று கண்டுபிடித்து விடலாம். அவர்கள் வீட்டுக்குச் செல்லும் வழியில் விபத்துப் பிரிவு உள்ளது. ஆனால் தலை வலி எந்தப் பிரிவைச் சேரும்? தலை வலிக்கு என்று தனிப் பிரிவு உள்ளதா?

இவ்விதம் ஐவரும் பேசிக் கொண்டிருக்கும்போது, சற்றுத் தூரத்தில் சென்று



நாட்கள் இருக்கும்.''

"என்ன நோய் அவருக்கு?''

"தலையில் பொறுக்க முடியாத வலி.''

"எந்த வார்டில் இருக்கிறார்?''

"எனது உறவினர் ஒருவர் எனது பக்கத்து வீட்டுக்குப் போன் செய்தார். அதில் வார்டு எண் 116-ல் இருப்பதாகச் சொன்னார்?''

"அங்கு போனீர்களா?''

"ஆம். ஆனால் பூட்டிக் கிடந்தது. அது வார்டு இல்லை.''

இவ்வளவு விஷயங்கள்தான் அவரால் சொல்ல முடிந்தது.

கொண்டிருந்த ஒரு நர்ஸைப் பார்த்ததும் பழனியின் முகத்தில் ஒளி.

"டேய், அதோ போறாங்களே அவங்க என் பக்கத்து வீட்லே உள்ள ஆன்ட்டி. அவங்களிடம் கேட்டால் தெரியும்'' என்றவாறு அவரை நோக்கி ஓடினான்.

''என்ன தம்பி வீட்டுக்குப் போகலையா?'' என்று நர்ஸ் கனிவோடு கேட்டார்.

''ஒண்ணுமில்லே ஆன்ட்டி'' என்று ஆரம்பித்து விஷயத்தைத் தெளிவாகச் சொல்லி விபரம் கேட்டான்.

"நான் இப்பொழுது பணியில் இருக்கி

றேன். என்னால் வர இயலாது. நீங்கள் எதற்கும் முதல் மாடியில் சென்று பாருங்கள். அங்குதான் பொதுவான நோய்களுக்கான வார்டுகள் உள்ளன" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

மீண்டும் இவரும் ஆலோசனை நடத்தினர்.

"சரி, நாம் முதல் மாடிக்குச் செல்வோம். முதியோர் இருவரையும் இப்பொழுது அழைத்துச் செல்ல வேண்டாம். கண்டுபிடித்தபின் கூட்டிச் செல்லலாம். அவர்களோடு ஜமாலை இங்கு விட்டுப் போகலாம். அவனிடம், நமது பைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லலாம்" என்று கூறினான் யூசுப்.

நால்வரும் விரைந்தனர்.

முதல்மாடி. நீண்ட முடிவே தெரியாத வராண்டா. எங்கு எப்படிச் செல்வது? சிறுவர்கள் திணறினர்.

"சரி, ஏதாவது ஓர் இடத்தில் விசாரிக்கலாம்"என்று கூறினான் ராஜா.

சற்று தூரத்தில் ஒரு வார்டு தெரிந்தது. அங்கே சென்றார்கள்.

பணியில் இருந்த நர்ஸ் மிகுந்த கனிவுடன், "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

ராஜா விளக்கிச் சொன்னான்.

"அந்த நோயாளி எந்த நாளில் அனுமதிக்கப்பட்டார் என்று தெரியுமா? தெரிந்தால் எந்த வார்டு என்று எளிதில் கண்டுபிடித்து விடலாம்" என்றார் நர்ஸ்.

"தெரியாதே" என்று ஏமாற்றத்தோடு சொன்னான் ராஜா.

"சரி பரவாயில்லை. இப்படிப்பட்ட வார்டுகள் இங்கு மொத்தம் மூன்றுதான் உள்ளன. அந்த முதியவர்களை இங்கு அழைத்துக் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு வார்டாகக் காட்டுங்கள். கண்டுபிடித்து விடலாம். அதுதான் வழி'' என்றார்.

ராஜா பழனியைப் பார்த்து "நீ உடனே சென்று அவ்விருவரையும் அழைத்துவா. ஜமால் அங்கேயே இருக்கட்டும்" என்று சொன்னான். பின்னர் அவனும் லோபஸும் வராண்டாவிற்கு வந்தனர்.

நேரம் ஓடிக் கொண்டிருக்கிறதே என்ற கவலை அவர்களின் முகங்களில் இருந்தது.

ஆனால் எப்படியும் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற வேகம் அவர்கள் மனங்களில் நின்றது.

ராஜா சிந்தித்தான். திடீரென்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் பளீரிட்டது.

"லோபஸ் நீ ஓடிச் சென்று அந்த மூன்று வார்டுகளின் எண்களையும் பார்த்துக் கொண்டுவா. அதில் 116 என்ற எண் உள்ளதா என்று கவனி. சீக்கிரம்" என்றான் ராஜா.

லோபஸ் விரைந்தான். ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு மீண்டும் வந்தான்.

"114ஆம் எண் வார்டுதான் இருக்கிறது."

ராஜாவின் முகத்தில் ஒரு நம்பிக்கை.

"நோயாளி இருக்கும் வார்டு அதுவாகத்தான் இருக்க வேண்டும். 114 என்ற எண், போனில் பெரியவர் கேட்ட போது தவறாக 116 என்று விழுந்திருக்க வேண்டும். சரி முதலில் அதையே பார்த்து விடுவோம்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போது, முதியவர்கள் இருவரும் வந்து விட்டனர்.


படியேறி வந்ததில் அவர்களுக்கு மூச்சு வாங்கியது. உடனே நடந்து சென்று நோயாளியைத் தேடும் நிலையில் அவர்கள் இல்லை.

"நான் வளர்த்த அருமையான பூனையைக் காணவில்லை...!"

"பேப்பரில் விளம்பரம் கொடுப்பது தானே?"

"பூனைக்குப் படிக்கத் தெரியாதே...!"


— பாலு



ஒலிம்பிக் போட்டிகள்

உலக நாடுகளால் நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டி முதன் முதலில் 1896-ஆம் ஆண்டு 'கிரீஸ்' நாட்டில் 'ஏதென்ஸ்' நகரில் நடைபெற்றது. அன்று முதல் 1936ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றது. பின் பல ஆண்டுகள், அதாவது இரண்டு முறை இப்போட்டிகள் நடைபெறவில்லை. மீண்டும் 1948-ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை முன் போல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இனி அடுத்த ஒலிம்பிக் போட்டி 2000-ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. இப் போட்டி ஆரம்பித்து 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

– பி. சதீஷ்குமார், திருப்பூர்.



அவர்கள் இருவரையும் சற்று அமர வைத்து ஆசுவாசப்படுத்தினார்கள்.

முதியவர்கள் இருவரின் கண்களிலும் மிரட்சி.

"ஒரே மகள். வேறு உறவினர் இல்லை. அவளின் கணவருக்குத்தான் இந்த நோய். எனவே இந்தத் தள்ளாத வயதில் இப்படி வந்து சிரமப்பட வேண்டியிருக்கிறது" என்று புலம்பினார் பெரியவர்.

அவர்களுக்குச் சற்றுத் தெம்பு ஏற்பட்டவுடன் நேராக 114-ஆம் வார்டிற்கு அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொரு படுக்கையாக பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

"அம்மா" என்று பலஹீனமான குரல் அழுகையுடன் கேட்டது.

முதியவரும் பாட்டியும் குரல் வந்த திசையில் திரும்பினர். அவர்கள் முகத்தில் ஒளி. அந்த ஒளி மறைந்து கண்களில் நீர் திரண்டது.

கட்டிலில் ஒரு நோயாளி. அவர் அருகே ஒரு பெண்மணி. குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது.

மூதாட்டி மகளே என்று கூப்பிட முயல்கிறார். அடக்க முடியாத அழுகையால் வார்த்தைகள் வரவில்லை. முதியவரைக் கேட்கவே வேண்டாம்.

அப்பப்பா!

அந்த முதியோர் இருவரின் முகங்களில் தெரிந்த உணர்வுகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

மகளையும் நோயாளியையும் பார்த்த நிலையில் உதவி செய்த மாணவர்களை மறந்தனர்.

நால்வரும் வெளியே வந்தபோது யாஸிர் சொன்னான்.

"டேய், அந்த முதியோர் இருவரும் மிகவும் களைப்பாக உள்ளனர். அந்தப் பெண்மணியோ இருவரையும் உபசரிக்கும் நிலையில் இல்லை. அவரைக் கவனிக்க அந்த அம்மா அவசியம் வேண்டும்" என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

மூவரும் கேள்விக் குறியோடு யாஸிரைப் பார்த்தனர்.

"நாம் இவ்வளவு தூரம் உதவி செய்தோம். நாம் போவதற்கு முன்னாலே அவங்களுக்கு டீ வாங்கிக் கொடுத்தால் என்ன?" என்றான்.

எல்லோரும் அதை ஆமோதித்தனர். நால்வரின் கைகளிலும் உள்ள சில்லரைகளைப் போட்டதில் மொத்தத்தில் இரண்டு பார்சல் டீக்கான காசு தேறியது.

அந்தப் பெண்மணியிடம் தெர்மாஸ் குடுவையை வாங்கிக் கொண்டு யாஸிர் விரைந்தான்.

போன வேகத்தில் டீயோடு திரும்பினான்.

அந்தப் பெண்மணி டீக்கான காசைக் கொடுக்க முயன்றபோது,

'வேண்டாம், நாங்கள் வருகிறோம்' என்று மட்டும் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

அந்தப் பெண்மணியின் முகத்தில் நன்றிப் பெருக்கு. அந்தச் சிறுவர்கள் போவதையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

ஐந்து நண்பர்களின் மனங்களிலும் விவரிக்க முடியாத நிறைவு, பூவின் வாசத்தைப் போல பல நாட்கள் இருந்தது.





சில எரிமலைகள் கடலுக்கடியில் வெகு ஆழத்திலும் சில எரிமலைகள் ஆழ மற்ற கடல் பகுதிகளிலேயும் காணப்படுகின் றன. கடல் நீரின் அழுத்தத்தால் அவைகள் அமுக்கப்பட்டு வெடிக்கும்போது நீராவியும் பல வகை யான வாயுக்களும் வெளியாகின்றன. அவை கடல் மட்டத்தை விட மிக உயரமாக வெளிக்கிளம்பும். சில எரிமலைகள் வெடிக் காமல் எப்போதும் அமைதியாக இருப்பதுமுண்டு. ஹவாய் தீவின் கருமணல் கடற்கரைகள் எல்லாம் கடல் நீராலும் அதிலிருந்து வெடித்த எரிமலைகளின் பாறைக் குழம்புகளாலும் ஆனவை என நம்பப்படுகிறது.

– க. பூங்கொடி, சித்தோடு.

பறவை வகை 15 ஆயிரமும் பாம்புகளில் மூவாயிரம் வகையும் ஆமைகளில் 300 வகையு முள்ளன. மெல்லுடலிகளில் ஒரு லட்சம் வகை யும் நண்டுகளில் இருபதாயிரம் வகையும் காணப் படுகின்றன. ஒரு செல் உயிரினங்கள் 15,000 வகையும் பாலூட்டிகளில் 5000 வகைகளும் உள்ளன. எல்லாவற்றையும் விட அதிகமான வகையில் பூச்சிகளில் ஏழரை லட்சம் இனங்கள் உள்ளன.

ஆதாரம் : அறிவுக்கடல் – உயிரினங்கள்

தகவல் : நெ. இராமன்,

சென்னை – 74.



மூக்கில் கொம்புடைய விலங்கான காண்டாமிருகத்தை ஆங்கி லத்தில் 'ரைனோசரஸ்' என்பார்கள். இச் சொல் கிரேக்க மொழியில் இருந்து வந்தது. கிரேக்க மொழியில், 'ரைனோஸ்' என்றால் மூக்கு என்று பொருள்.





பேசும் திமிங்கலங்கள்!

'செராஸ்' என்றால் கொம்பு என்று பொருள். எனவே மூக்கின் மேல் ஒற்றைக் கொம்புடைய இவ் விலங்கை 'ரைனோசரஸ்' என்று அழைக்கின்றனர்.

தர்மபுரிக்கு அருகாமையில் உள்ள நீர் வீழ்ச்சி 'ஒகனேக்கல்' ஆகும். இச் சொல் கன்னட மொழியிலிருந்து வந்தது. கன்னடத்தில் 'ஹோகே' என்றால் புகை என்ற பொருளாகும். நீர்வீழ்ச்சி கொட்டுகின்ற பொழுது நீர்த்திவலைகள் சிதறி புகை போன்ற நீர்ப்படலம் எழுவதால் இப்பெயர் வந்தது.

ஆதாரம் : பெயர்களுக்குப் பின்னால்

தகவல் : **கே. ஆர். உதயகுமார், சென்னை - 1.**


அண்டார்டிகாவில் பெருமளவில் வாழுகின்ற பெங்குவின் பறவைகள், கடல் நீருக்குள் நீந்தியபடி 15 நிமிடங்களுக்கு மேலும் இருக்கக்கூடியவை. கடலுக்கடியில் 300 மீட்டர் ஆழம் வரை கூட அவை செல்லும். அண்டார்டிகாவில் இவை மட்டுமின்றி உலகில் வேறெங்கும் காணப்படாத 10 வகைப் பறவைகள் உள்ளன.


– கே. ராஜேஸ்வரி, மருதாடு.



நீரில் வாழும் உயிரினங்கள் பேசுகின்றன என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் உண்மையில் கடலின் அடியில் வாழும் திமிங்கலமும் வேறு சில மீன்களும் பேசிக் கொள்கின்றன.

உண்மையில் திமிங்கிலங்களுக்குக் குரல் நாண்கள் இல்லை. ஆனாலும் அவை ஒன்றுக்கொன்று பேசிக் கொள்கின்றன. மிகவும் இனிமையாக கிளிக் கிளிக் என்று விட்டு விட்டு ஒலியெழுப்புகின்றன. இந்த ஒலியானது விநாடிக்கு 50000 அதிர்வுகளைக் கொண்டது.





இந்த ஒலிகள் மனிதன் கேட்கும் சக்திக்கு அப்பாற்பட்டவை. அந்த ஒலிகளைத் தனியே கருவி மூலம் பதிவு செய்கின்றனர்.

இது போல வேறு சில பறவைகளும் தங்கள் எதிரொலியின் மூலம் இடத்தை அறிந்து கொண்டு பறந்து செல்கின்றன.



அப்துல் இஸ்மாயில் என்ற பாரசீக நாட்டு மன்னர் புதிய புதிய நூல்களைப் படிப்பதில் விருப்பம் உள்ளவர். பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் வியத்தகு குறிப்புகளில் ஒரு வினோதமான குறிப்பு காணப்படுகிறது.

இந்த மன்னர் இஸ்மாயில் அருமையான நூலகம் ஒன்றை வைத்திருந்தார். 117000 நூல்கள் அவரின் நூலகத்தில் இருந்தன.

படையெடுப்புக் காலங்களில் ஆயுதங்களுடன் சுமார் 400 ஒட்டகங்களில் பல்வேறு நூல்களையும் தன்னோடு எடுத்துச் செல்லும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம்.

தனக்கு அவ்வப்போது தேவைப்படும் நூல்களை உடனுக்குடன் எடுத்துத் தர நூலக அதிகாரிகளையும் படை வீரர்களுடன் அழைத்து வருவாராம். இதில் இன்னும் சுவையான செய்தி என்னவென்றால் இஸ்மாயில் மன்னர் ஆட்சியில் மிக உயர்ந்த சம்பளம் பெறும் ஊழியர்களில் இந்த நூலக அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர் என்பது தான்!

சில வகைத் தாவரங்கள் மற்றும் மரங்களில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ள எண்ணெய், பொடி இவற்றைக் கலந்து ஜெல்லி போன்ற ஒரு பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. கம்பளி விரிப்பு ஒன்றை இந்த ஜெல்லியில் நனைத்தால் அந்தக் கம்பளியானது 2800 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணத்தைத் தாங்குகிறது.

இந்தக் கம்பளிக்குள் ஒரு மனிதனை மூடி நெருப்பில் போட்டால் தீ அவனைச் சுடாது. கம்பளி நெருப்பை அணைப்பதுடன், தீயினால் ஏற்படும் புண்களை பாக்டீரியா தாக்காமல் பாதுகாக்கிறது. காயங்களையும் எரிச்சல் இல்லாமல் குளிர வைக்கிறது.

இந்தப் புதிய கம்பளியை அமெரிக்காவில் உள்ள பென்ஸில்வேனியா விஞ்ஞானக் கழகத்தினர் தயாரித்துள்ளனர்.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

- யானையின் துதிக்கையில் எலும்பே கிடையாது.
- முள்ளம் பன்றியால் நீரில் மூழ்க முடியாது.
- ஜார்ஜ் பெர்னாட்ஷா ஆஸ்கார் விருதும் நோபல் பரிசும் பெற்றவர்.

– கே. ராஜேஸ்வரி, மருதாடு.

உலகிலேயே அதிகமான சாக்லெட் பிரியர்கள் பெல்ஜியத்தில்தான் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு 11 பவுண்ட்டு சாக்லெட் சாப்பிடுகிறார்கள். பிரிட்டனில் ஒரு ஆண்டுக்கு 3 பில்லியன் பவுண்டுகளுக்கு சாக்லெட் வர்த்தகம் நடைபெறுகிறது. இதன்படி ஒரு சராசரி நபர் வாரந்தோறும் சாக்லெட்டுக்காக ஒரு பவுண்டை (சுமார் 70 ரூபாய்) செலவிடுகிறார்.

– சந்தியூர் ஏ. கோவிந்தன், மல்லூர்.

- நமது தும்மல் மணிக்கு 45 மைல் வேகத்தில் பாய்ந்து பரவும் தன்மை கொண்டது.
- முத்துச்சிப்பியில் முத்து உருவாக குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் தேவைப்படுமாம்.
- கிராமபோன் இசைத்தட்டைக் கண்டுபிடித்தவர் எமிலி பெர்லினர்.
- முதன் முதலில் சிவில் சர்வீஸ் தேர்வை நடத்திய நாடு சீனா.
- பாம்புக்கு வாசனையை அறியும் சக்தி அதன் நாக்கில் இருக்கிறது.

– பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி, சென்னை.

ஆந்தை வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் ஆந்தை கிடைத்து விடும்.

உடல்:R18 →O18 →P19 → O19→N23→ N19→L21→ N18→M18→I14→H12 → H10→G9→F6→F4 → G2→H1→L1→P7 → R8→S10→T11→W19→U18

இறக்கை:L8→O8→S12→U18→W21→ R18→O17→ P16→O15→N15→L14→ J10


முகம் :G3→G5 →I7→K7→M5→M3

அலகு: I5 →J6→K5

கண்: H2 →I2→J3→K2→L2

வால்: V20→V26→T26→T20→T24→ S24→ S19→S24→R24→R19→R22→ Q22→R18

கிளை: A23 →H23→N21→Q21→U21→ Y22→ A20→F20→B17→C15→I20→ N18→U17→Z18



நன்றி: லிட்டில் ஆர்க்



யானையிடமிருந்து தப்பிக்கணும்...

அந்த மாணவர்கள் மலையடிவார அய்யனார் கோவில் அருகே உள்ள ஆஸ்ரமத்தில் சைக்கிள்களை வைத்துவிட்டுத் திண்ணையில் சிறிது அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இளங்கோ எழுந்து தன் பையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துக் காண்பித்தான். அது ஒரு இலை! ஒரு இலையா? ஒரே காம்பில் பத்து இலைகள் இருந்தன.

"இது வித்தியாசமா இருக்கே அதிசயமாவும் இருக்கு. இது என்ன இலை

இளங்கோ?" கேட்டான் கண்ணன். "இதுக்கு பேரு மகா வில்வம். இது பற்றி 'நம் நாட்டு மூலிகைகள்' என்ற புத்தகத்தில் டாக்டர் கண்ணப்பர் எழுதியிருக்காரு. இராமாயணத்துல வருகிற இலங்கை மன்னன் இராவணன் சிவ பூஜைக்கு இந்த இலைகளைத்தான் பயன்படுத்தினானாம். இந்த மரம் இலங்கையிலும் காசியிலும் சென்னை கபாலீஸ்வரர் கோவிலில்கூட ஒரு மரம் இருக்கிறதாம். இந்த மரத்தைப் பார்த்தாலே புண்ணியம் என்று பல வெளி மாநிலத்தவர் இதைப் பார்க்க வருகிறார்களாம்.

"இந்த இலைகளால் சிவனுக்கு அர்ச்சனை செய்தால் நினைத்த காரியம் நடக்குமாம். இந்த மரத்தை வளர்த்தால் அசுவமேதயாகம் செய்த பலன் கிடைக்குமாம். இப்படியெல்லாம் அந்த நூலில் எழுதியிருக்கிறார் டாக்டர் கண்ணப்பர்!"

"சரி இந்த இலை உனக்கு எப்படி கிடைத்தது அதைச் சொல்லு" என்றான் முருகேசன்.

"அதை நான் சொல்றேன்" என்ற அமுதன் "இந்த அரிதான மரம் வேறு எங்கும் இல்லேன்னு அதுல சொல்லியிருக்காரில்லே. எங்க அப்பா அதைப் படிச்சிருக்காரு. அடிக்கடி வனங்கள்ல சுற்றித் திரியும் எங்க அப்பா இது நம்ம அய்யனார் கோவில் மலைவனத்துல இருக்குன்னு கண்டுபிடிச்சாரு. அதுல இருந்து போன வாரம் கொண்டு வந்த இலைதான் இப்ப இளங்கோ காட்டுனது."

"சரி இப்ப நாம என்ன செய்யப் போறோம்?"

"நாம எல்லாரும் போயி நீலனையும் கூட்டிக்கிட்டு இந்த வனத்துல மகா வில்வ மரங்க எங்க எங்க இருக்குன்னு கண்டுபிடிக்கணும். சின்னக் கன்று இருக்குதான்னு பார்க்கணும். இருந்தா பல கன்றுகளை எடுத்து வந்து நம்மூரு கோவில்களில் நட்டு வைக்கணும். இது பல மருந்துகளுக்கும் ஆகுங்குறதால எல்லாருக்கும் பயன்படுமில்லையா? சரி வாங்க போகலாம்."

அவர்கள் ஆதிவாசிகள் குடிசைப் பக்கம் சென்று நீலனை அழைத்தனர். நீலன் காட்டுக்குள் சென்றிருப்பதாகவும் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான் என்றும் கூறினார்கள் அங்கு இருந்தவர்கள்.

"சரி நாங்க அருவிக்கு மேற்கே போகிறோம். நீலன் வந்ததும் மேற்கே வரச் சொல்லுங்கள்" எனக் கூறி விட்டு அவர்கள் கிளம்பினார்கள்.


அவர்கள் அடர் வனத்திற்குள் நடந்து கொண்டிருந்தனர். ஒரு இடத்தில் "இதோ இருக்கு கோவில் மரம்" என்று கண்ணன் கத்தினான்.

"ஆமா அதே மாதிரி இலைகள்! இதுவேதான்!"

"சரி அடியில சின்னச் சின்ன கன்றுக இருக்கா பாருங்க" அவர்கள் சுற்றியும் தேடினார்கள்.

"பெரிய கன்று ஒண்ணு இருக்கு. அதைக் கொண்டு போயி நட்டு வளர்க்க முடியாதே!"

"சரி வாங்க வேறு இடத்துல பார்க்கலாம்."



அவர்கள் மேலும் நடந்து பாறைகள் உள்ள பக்கம்

கொ.மா. கோதண்டம்

வந்தனர். ஒரு பாறையில் அமர்ந்தனர். அந்தப் பக்கம் ஏதோ சத்தம் கேட்கவே எட்டிப் பார்த்தனர். பின் பகுதியில் இரண்டு யானைகள் நின்றிருந்தன.

"ஏய் யானைகள் பின்னால இருக்கு. பேசாதீங்க!"

"இப்ப என்ன செய்ய?"

"இனி ஓட முடியாது. பாறைக்குள்ளே ஒளிஞ்சிக்கிடலாம்."

"ஒளிஞ்சிக்கிட்டாலும் மனுச வாடைக்கி யானை இங்க வந்துடுமே!"

"ஐயோ, அப்படியா!"

"ஏதாவது பச்சிலை பறிச்சி முகம் கை கால் பகுதிகளில் தேய்சிட்டா யானைக்கு நம்ம வாடை அடிக்காதாம்!"

"அப்ப தேய்ச்சிட்டு இங்க ஒளிஞ்சிக்கிடலாம்." அவர்கள் ஆளுக்கு ஒரு செடியில் பச்சிலையைப் பறித்து உடலில் தேய்த்துக் கொண்டனர். ஒரு பச்சிலையை கையில் தேய்த்துக் கொண்ட கண்ணன் திடீரென்று அலறினான்.

"ஐயோ ஏதோ விஷச் செடி இலையை தேய்ச்சிட்டான் போலிருக்கே!" அவர்கள் செய்வதறியாது தவித்தனர்.

அங்கு வந்து கொண்டிருந்த நீலன் அலறலைக் கேட்டு ஓடி வந்தான்.

"அடடா இது விஷச் செடியாச்சே! ரொம்ப காந்துமே!" என்றவன் கண்ணனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அவர்களை யானையிடமிருந்து தப்ப வைக்க ஆதிவாசிகள் குடிசைப் பக்கம் ஓடினான். மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். ஒரு பாறையில் கண்ணனை இறக்கி வைத்து விட்டு எல்லாக் குடிசைகளிலும் ஓடி ஓடி பார்த்து விட்டு வந்து ஒரு குடிசையில் சோறு வேகும்போது மேலே மிதக்கும் கஞ்சியை ஒரு குவளையில் வடித்துக் கொண்டு வந்து கண்ணன் கையில் தடவினான் நீலன்.

சிறிது நேரத்தில் காந்தல் மறைந்து கண்ணனின் முனகல் சத்தம் குறைந்தது. பின்னர் அப்படியே பாறையில் உறங்கி விட்டான்.

மாணவர்கள் நீலனுக்கு நன்றி கூறினார்கள். அவர்கள் வந்த காரியம் தெரிந்து கொண்ட நீலன், "சாமிகளா நீங்க இன்னிக்கி இவங்க எந்திரிச்சதும் அருவியில குளிச்சிட்டு ஊருக்குப் போங்க. இன்னொரு நாள் நீங்க வாங்க. காட்டு வில்வ மரம் இந்த வனத்துல நிறையவே இருக்கு. சின்ன சின்ன கன்னுக கூட இருக்கு. பத்து கன்னு வரைக்கித் தோண்டி எடுத்துத் தாறேன். ஊர்ல குளிர்ச்சியான இடத்துல நட்டு வையிங்க வளர்ந்திடும்" என்றான்.


கண்ணன் எழுந்ததும் நீலனுக்கு நன்றி கூறி விட்டு அவர்கள் கிளம்பினார்கள்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை




1 சி	த	ம்	2 ப	ர	ம்	■	3 நெ	ல்
ல	■	■	ண	■	ய	■	■	வ
ம்	■	■	ம்	■	தா	■	லை	4 சே
5 ப	ண்	ணை	■	■	த்	■	6 ஓ	■
ம்	■	■	7 ச	■	8 ப	■	■	ம்
■	9 மொ	■	ந்	■	■	கு	ங்	10 ச
11 கு	ழி	■	த	■	12 கா	■	■	ட்
ன்	■	■	ன	■	வி	■	■	பி
று	13 ஆ	■	ம்	த	ரி	ச	ய	14 சு


கடல் நீர் உப்புக் கரிப்பது ஏன்?
கதை : சார்லசு
படம் : சுமன்
பெரியநாயகத்திடம் ஒரு அதிசயப் பை இருந்தது. அது எதைக் கேட்டாலும் கொடுக்கக் கூடியது.
ஒருநாள்—
யாரப்பா நீ? இங்கே உட்கார்ந்திருக்கே?
ஐயா! என் பேர் சின்னச்சாமி. பக்கத்து ஊருக்குப் போகணும். ரொம்பப் பசி. நடக்க முடியலை. அதான்...
கொஞ்சம் இரு. சாப்பாடு தரேன்.
நீங்க சமைக்கிற அளவுக்கு எனக்குப் பொறுமை இல்லைங்க.
இதோ ஒரு நொடியில் சாப்பாடு போடறேன்.
வீட்டிற்குள் சென்ற பெரியநாயகம் உணவுடன் வந்தார்.
ஐயா! போன உடனே எப்படி சூடா உணவு கொண்டு வந்தீங்க?
என்கிட்ட ஒரு அதிசயப் பை இருக்கு.
பையால் எப்படி?
அது எதைக் கேட்டாலும் கொடுக்கும்.


ஐயா, அலமாரியிலே இருக்கே, இந்தப் பையா?
ஆமாம்!
சாப்பாடு பிரமாதம்! இந்தப் பையை வச்சுக்கிட்டு ஏன் வேலைக்குப் போறீங்க?
உழைச்சு சாப்பிடணும் என்பது என் எண்ணம்.
இந்தப் பையை வேறு யாருக்காவது கொடுக்கலாமே!
பொது மக்களுக்குப் பயன்படுத்தற நல்ல மனிதரிடம் இதை ஒப்படைக்க விரும்பறேன்.
சரி. எனக்குத் தூக்கம் வருது படுக்கறேன்.
நானும் தூங்கணும். காலையிலே வேலை இருக்கு.
நள்ளிரவில்—
இதுதான் சமயம். பையை எடுத்துட்டு ஓட வேண்டியதுதான்!
தெருவிலே கூட யாரும் கவனிக்கலை.
நீண்ட நேரப் பயணத்துக்குப் பின் கடற்கரையை அடைந்தான் சின்னச்சாமி.


ரொம்ப தூரம் வந்தாச்சு. இனி பயமில்லை.
சரி. இந்தப் பைகிட்டே என்ன கேட்கலாம்?
ஒண்ணும் தோணலையே! ம்... பையே, பையே உப்பு வேணும்.
ஆஹா! உப்பு மலை போல குவியுதே!
இந்தப் பையை வச்சு ராஜ வாழ்க்கை வாழலாம்! பையே உப்பை நிறுத்து.
என்னது நிறுத்தமாட்டேங்கிறது. எப்படி நிறுத்தறதுன்னு தெரிஞ்சுக்காம வந்துட்டேனே!
சே! இந்தப் பை இனி எனக்கு வேண்டாம்.
அன்றிலிருந்து கடல் நீர் உப்புக் கரிக்கிறது.

ஸெராக்ஸ் உருவானது எப்படி?



சான்றிதழ்களையோ முக்கியமான தாள்களையோ நகல் எடுத்துக் கொள்வது நல்லது. போட்டோ எடுத்து பிரிண்ட் போடலாம். ஆனால் இதற்கு மிக அதிக செலவு ஆகுமே! சாதாரண வெள்ளைக் காகிதத்திலேயே காப்பி எடுக்கும்முறைதான் ஸெராக்ஸ். இதன் ஆரம்பப் பெயர் ஸெரோகிராபி என்பதுதான். ஸெராஸ் என்றால் உலர்ந்த என்று பொருள். கிராபின் என்றால் எழுத என்று பொருள். ஸெரோ கிராபி என்றால் உலர்ந்த முறையில் எழுதும் சாதனம் என்று பொருள்.

இதைக் கண்டுபிடித்தவர் செஸ்டர் கார்ல்சன் என்ற அமெரிக்கர். எலக்ட்ரானிக் கம்பெனி ஒன்றில் பணியாற்றி வந்தார் கார்ல்சன். முக்கியமான தகவல்களைக் கொண்ட குறிப்புகளுக்கு பிரதிகள் கிடைக்காமல் அவதி பட்டார். விரைவாக 'காப்பி' செய்யும் இயந்திரத்தைக் கண்டு பிடிக்க ஆர்வம் காட்டினார். மின் சாதனத் துறையில் பணியாற்றிய அவர் மின்சாரத்தைக் கொண்டு பொருட்களில் ரசாயன மாற்றம் ஏற்படுத்தும் ஒரு முறையைக் கண்டுபிடித்தார். நியூயார்க் நகரிலுள்ள தன் வீட்டின் சமையலறையில் ஆய்வுகளை மேற்கொண்டார். 1937-ல் சாதனத்துகான உரிமம் பெற்றுக்கொண்டார். 1938-ல் முதல் காப்பியை வெற்றிகரமாகத் தயாரித்துக் காட்டினார். இதற்கு அவர் பயன்படுத்தியது கந்தகம் பூசிய துத்தநாகத் தகடு. இவ்வாறு அவர் வெற்றிகரமாக இந்த இயந்திரத்தைத் தயாரித்தாலும் அவரால் இதை விற்பனை செய்ய முடியவில்லை. பத்து ஆண்டுகள் வரை விற்பனை செய்ய முடியாமல் தவித்தார்.

அதன் பின்னர் இரண்டு நிறுவனங்கள் கார்ல்சனுக்கு உதவின. 1949-ம் ஆண்டு தான் ஸெராக்ஸ் இயந்திரம் விற்பனைக்கு வந்தது. ஆனாலும் மிகப் பெரிய அளவுக்கு விற்பனை ஆகவில்லை. பிரதிகளும் தரமானதாக இல்லை. மாடல் - 914 என்ற இயந்திரம் அலுவலக உபயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இதன் பிறகு கார்ல்சனுக்கு நல்ல காலம் பிறந்தது. நான்கே வருடத்தில் 10 மடங்கு லாபம் பெற்று பணக்காரர் ஆனார். 1968-ல் இறந்தபோது பல கோடிகளுக்கு உரிமையாளராக இருந்தார்.

இன்று ஸெராக்ஸ் இயந்திரம் எவ்வாறு இயங்குகிறது தெரியுமா? மின்சார சக்தியின் ஆகர்ஷிக்கும் திறன் எந்திரத்தில் நகல் எடுக்கும் பொருள் மீது பயன்படுத்தப் படுகிறது. நகல் எடுக்க பட வேண்டிய அசல் பிரதி, ஒரு கண்ணாடி ஸ்கிரீன் மீது வைக்கப்படும். அந்த அசல் பிரதியின் மறு பிம்பம் மின்சாரம் பாய்ச்சப் பட்ட ஒரு தகட்டில் ஃபோகஸ் செய்யப் படும். அசல் பிரதியின் ஒளி பாயும் பகுதிகளை பாசிட்டிவ் மின்சக்தி அழித்து விடுகிறது. எழுத்து உள்ள பகுதிகளை விட்டு விடுகிறது. பிறகு 'டோனர்' எனப்படும் பிளாஸ்டிக் பவுடர் உள்ளே ஸ்பிரே செய்யப்படுகிறது. இந்த பவுடர் அசலின் எழுத்துப் பகுதிகளில் மட்டும் ஒட்டிக் கொள்கிறது. இந்த நிலையில் ஒரு வெள்ளைக் காகிதம் அசல் பிரதிக்கும் பிளேட்டுக்கும் இடையே செலுத்தப்பட்டு மின்சக்தி பாய்ச்சப்படுகிறது. பிளேட்டின் எழுத்துகள் மீது படிந்துள்ள பவுடர் காகிதத்தில் பதிவாகிறது. பிறகு இது வெப்பத்தின் மூலம் நிலை நிறுத்தப்படுகிறது.

— **துரை கார்த்திக்,**
மன்னார்குடி.

சுழல் கோப்பை — 1999

முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள்

I. அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

II. இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி, லால்பேட்டை.

III. அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெரியதச்சூர்.

IV. (அ) அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, துத்திப்பட்டு.

(ஆ) டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளி, மதுரை.

V. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வெள்ளோடு.



கோகுலம் க்விஸ்

1. தாவரங்களுக்கும் உயிரும் உணர்ச்சியும் உண்டு என்ற உண்மையைக் கண்டறிந்தவர் __________

2. கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் __________ தொகுதியைச் சேர்ந்தவை.

3. பெரிஸ்கோப் __________ல் பெரிதும் பயன்படுகிறது.

4. மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள முக்கிய கோடை வாசஸ்தலம் __________

5. ஜீனி (சர்க்கரை) என்பதன் விஞ்ஞானப் பெயர் __________

6. பூமியில் 6 கிலோ எடையுடைய ஒரு பொருள் சந்திரனில் __________ கிலோ அளவாக இருக்கும்.

7. பழைய டெல்லி நகரை உருவாக்கியவர் __________

8. நியூசிலாந்து கிரிக்கெட் கேப்டன் __________

9. தேசிய கீதத்தை இயற்றியவர் __________

10. பெரிய புராணத்தை இயற்றியவர் __________

இந்தப் பத்து கேள்விகளுக்கும் விடைகளைக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள். மறக்காமல் முகவரி கூப்பனையும் ஒட்டி முழு முகவரியையும் எழுதுங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முடிவு தேதி 31.1.2000

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97





நூற்றாண்டில் சில முக்கிய நிகழ்வுகள்...

புதிய நூற்றாண்டை வரவேற்கும் அதே நோக்கில் முடியப் போகும் நூற்றாண்டில் நடந்த முக்கியமான சம்பவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் ஆண்டிபட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள்.

எஸ். உஷா (எட்டாம் வகுப்பு): நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும் இந்த நூற்றாண்டின் சாதனையாக நான் நினைப்பது கம்ப்யூட்டர்தான். கம்ப்யூட்டர் 19ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட நமக்கு பயனளித்தது இந்த நூற்றாண்டில்தான்! கிராமப்புறப் பள்ளிகளில்கூட கம்ப்யூட்டர் வகுப்புகள் வந்துவிட்டன. எங்கள் பள்ளியிலும் இருக்கிறது. அதே போல் இண்டர் நெட் வசதியையும் சொல்ல வேண்டும்.

எஸ். சியாமளா (ஒன்பதாம் வகுப்பு): என்னைப் பொறுத்தவரை 1969ஆம் ஆண்டு ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலடி எடுத்து வைத்தாரே அதுதான் பெரிய சாதனையாகத் தோன்றுகிறது. 'நிலா, நிலா ஓடி வா' என்று கூப்பிட்ட காலம் போய் நிலவுக்கே சென்று வந்து விட்டோம்.

அதேபோல் இந்தியாவில் பிறந்த கல்பனா சாவ்லா விண்வெளிக்குச் சென்று வந்ததும் குறிப்பிட வேண்டிய அம்சம் தான்!



• மண்டேலா



• நேரு

எஸ். குகப்ரியா (ஆறாம் வகுப்பு): எனக்கு நம்ம காந்தி தாத்தா சுடப்பட்ட நிகழ்ச்சிதான் உடனே நினைவுக்கு வருது. அஹிம்சை வழியில் போராடிய மனிதர் ஆயுதத்தால் கொலை செய்யப்பட்டாரே! அதேபோல் ஜவாஹர்லால் நேருவின் பஞ்சசீலக் கொள்கையும் முக்கியமானதே!


விக்னேஸ்வரி: எனக்கு 3 வேதனையான விஷயங்கள்தான் நினைவுக்கு வருகின்றன. முதல் சம்பவம் 1945 ஆம் ஆண்டு ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் குண்டு போட்ட சம்பவம். இரண்டாவது ஈராக் மீது போர் தொடுத்த சம்பவம். கடைசியாக நம்ம நாட்டில் நடந்த கார்கில் ஆக்கிரமிப்பு.

தேவிப்ரியா (ஒன்பதாம் வகுப்பு): பொக்ரான் அணுகுண்டு சோதனைதான் நம்ம நாட்டில் இந்த நூற்றாண்டின் சாதனையாக நான் சொல்வேன். முன்பு ரஷ்யா என்றொரு நாடு இருந்தது. அதற்காகவாவது அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் பயப்பட்டன. இப்போது சோவியத் யூனியன் பல குடியரசுகளாகப் பிரிந்து விட்ட நிலையில் நம்மை நாமே தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்?

அ. சரண்யாதேவி (ஏழாம் வகுப்பு): இன்று உலகில் நடக்கக்கூடிய அத்தனை விஷயங்களையும் நம் வீட்டிற்குள்ளே பார்க்க முடிகிறது என்றால் அது தொலைக்காட்சியால்தான்! 1930 ஆம் ஆண்டு சுவாரிகின் தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டறிந்தார்.

ரதி (ஒன்பதாம் வகுப்பு) : எனக்குப் பிடிச்ச விளையாட்டு கிரிக்கெட்தான். அதில் இந்த நூற்றாண்டில் சாதனை படைத்தவராக நான் நினைப்பது ஆஸ்திரேலிய வீரர் டான் பிராட்மேன்தான்! அதேபோல் நம்ம நாட்டில் கபில்தேவின் சாதனையை யாரும் முறியடிக்கவில்லை.


சண்முகப்ரியா (பத்தாம் வகுப்பு): இந்த நூற்றாண்டில் நான் மதிக்கும் தலைவர் நெல்சன் மண்டேலா. கறுப்பு இன மக்களுக்காக 26 வருஷம் சிறையில் அடைந்து கிடந்தவர். ஒருமுறை அதிபராக இருந்து விட்டு அடுத்த தேர்தலில் போட்டியிடாத பதவி ஆசை இல்லாதவர் மாண்டேலா மட்டுமே!



• காந்தி

துர்கா (ஏழாம் வகுப்பு): இலக்கியத் துறையில் நாம் இழந்தது பாரதியாரைத் தான். 39 வயதிலேயே மாபெரும் கவிஞரை நாம் இழந்து விட்டோம். அதேபோல் வெளிநாட்டில் பிறந்து நம்ம நாட்டில் தன் வாழ்நாள் முழுவதையும் ஏழை எளியோருக்கு செலவிட்டு உயிர் துறந்த அன்னை தெரசாவையும் நாம் இந்த நூற்றாண்டில் பறி கொடுத்து விட்டோம்.

● போக்குவரத்துத் துறையில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் விமானம் இந்த நூற்றாண்டில் தான் ரைட் சகோதரர்



களால் கண்டுபிடிக்கப்பட்டது. 1903ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி ஆர்வில் ரைட் பறந்து காட்டினார்.



• சார்லி சாப்ளின்

● சினிமா ஆரம்பித்து நூறு வருடங்களுக்கு மேலாகி விட்டது. சினிமா இந்த நூற்றாண்டில்தான் அதிக மாறுதலுக்குட்பட்டு மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறது. 1893 ஆம் ஆண்டு தாமஸ் ஆல்வா எடிசன் கினட்டாஸ்கோப் என்னும் கருவியை உருவாக்கினார். இதைக் கொண்டு இயங்கும் படங்களைக் காண வழி ஏற்பட்டது. 1903ஆம் ஆண்டு முதல் கதைப்படம் காட்டப்பட்டது. ஆரம்பத்தில் வசனமில்லாத படங்கள் வந்தன. அறிவியல் வளர்ச்சியால் பேசும் படங்களும் பின்னர் வண்ணப் படங்களும் தோன்றலாயின. சினிமா வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் சார்லி சாப்ளின். இவரது படங்கள் நகைச்சுவையும் புரட்சிக் கருத்துகளும் நிறைந்தவை.

● இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது இந்த நூற்றாண்டின் முக்கியமான நிகழ்வு. இதில் சமீபத்தில் விடுதலை பெற்ற ஹாங்காங்கும் அடங்கும்.

● 1947 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானும், மேற்கு பாகிஸ்தானும் என பிரிக்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியா சுதந்தரம் பெற்றது. அதேபோல் பாகிஸ்தானும் சுதந்தரம் அடைந்தது. வங்காளத்தில் இருந்து பிரிந்த கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தானுடன் இணைந்திருக்க விரும்பவில்லை. 1972ஆம் ஆண்டு வங்கதேசம் உருவானது.


இருமுறை நோபல் பரிசு பெற்றவர் மேரி கியூரி. 1898 ஆம் ஆண்டு கணவர் பியேர் கியூரியுடன் இணைந்து மேரிகியூரி ரேடியத்தைக் கண்டறிந்தார். 1902 ஆம் ஆண்டு இருவருக்கும் இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. 1911ல் ரசாயனத் துறை சாதனைக்காக மீண்டும் மேரி கியூரிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. கதிரியக்கத்தை செயற்கை முறையில் உண்டாக்கும் வழிமுறையைக் கண்டுபிடித்ததற்காக 1935 ஆம் ஆண்டு மேரி கியூரியின் மகள் ஐரீன் கியூரிக்கும் அவரது கணவர் லாலியோ கியூரிக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.



• மேரி கியூரி

● முதன் முதலில் 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 4ந் தேதி அப்போதைய சோவியத் யூனியன் 'ஸ்புட்னிக் – 1' என்ற செயற்கைக்கோளை விண்வெளிக்கு அனுப்பியது.

● இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானிகளில் தலை சிறந்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். ஒரு பொருளின் எடைக்கும் அப் பொருளிலிருந்து பெறக்கூடிய சக்திக்கும் உள்ள தொடர்பை இவரது 'சார்பு கொள்கை' விளக்குகிறது. 1921 ஆம் ஆண்டு இக் கொள்கைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.



• ஐன்ஸ்டைன்

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள் ஆரியபட்டா. இது 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விண்ணில் செலுத்தப்பட்டது.

● இந்த நூற்றாண்டில்தான் விவசாயத்தை மேம்படுத்த பசுமைப் புரட்சியும் கடல் வளத்தைப் பெருக்க நீலப் புரட்சியும் பால் வளத்தைப் பெருக்க வெண்மைப் புரட்சியும் கொண்டு வரப்பட்டன.



● 1876 ஆம் ஆண்டிலேயே அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் தொலைபேசியைக் கண்டறிந்தார். நம் நாட்டில் தொலைபேசியை எல்லோரும் பயன்படுத்தும் விதமாக கிராமப் புறங்களுக்கும் கொண்டு சென்றது இந்த நூற்றாண்டே!

● 1949 ஆம் ஆண்டு சீனா கம்யூனிஸ்ட் நாடானது. நம்மை விட அதிக மக்கள் தொகை கொண்ட, பின் தங்கியிருந்த சீனா இன்று பலவற்றிலும் வளர்ச்சியடைந்து வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

● இந்த நூற்றாண்டின் மிகக் கொடிய நோய் எய்ட்ஸ். இதுவரைக்கும் இந் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

● 1907 ஆம் ஆண்டு பெல்ஜிய நாட்டுக்காரரான லியோ பாக்லாண்ட் என்பவர் 'பிளாஸ்டிக்'கைக் கண்டுபிடித்தார். பெரிய இயந்திரங்களிலிருந்து அன்றாட வீட்டு உபயோகப் பொருட்கள் வரை இன்று எங்கும் பிளாஸ்டிக் மயம்தான்!

● டாலி என்ற ஆட்டுக்குட்டியின் ஒரு உயிரணுவை மட்டுமே கொண்டு அதே போல் இன்னொரு ஆட்டுக் குட்டியை உருவாக்கினர் விஞ்ஞானிகள். இந்த குளோனிங் முறை பரபரப்பாகப் பேசப்பட்டது.

● பத்தாயிரம் பேரை பலி வாங்கிய ஒரிசா புயல் மிகக் கோர சம்பவம்!

கோகுலம் நியூஸ்

டீ.வி + போன்

தென் கொரியாவில் உள்ள சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் டீ.வி + போன் முதன்முதலாக தயாரித்துள்ளது. இதில் உள்ள 1.8 அங்குலத் திரையில் எதிர்முனையில் பேசுகிறவரின் உருவத்தைக் காணலாம். 200 நிமிடங்கள் தொடர்ந்து பேசக்கூடிய இந்த டீ இன் ஒன் ஜனவரி மாதத்தில் விற்பனைக்கு வருகிறது. விலை 55,000 ரூபாய்.



புதுக்கோள்கள்

● அகில உலக வானியல் விஞ்ஞானிகள் சூரிய மண்டலத்துக்கு வெளியே ஆறு புதிய கோள்களைக் கண்டுபிடித்துள்ளனர். இக் கோள்கள் வியாழன் கோள் அளவோ அதைவிட பெரியதாகவோ இருக்கலாம் என கணித்திருக்கிறார்கள். பூமியிலிருந்து 65லிருந்து 792 ஒளியாண்டு தூரத்தில் இவை உள்ளன.

தலை சிறந்த பெண்மணிகள்!

இந்த ஆயிரம் ஆண்டுகளில் தலை சிறந்தவராக முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பிரிட்டிஷ் தொலைக்காட்சி பிபிசி, தனது இன்டர்நெட் செய்தி வாசகர்களிடையே இக் கருத்துக் கணிப்பை நடத்தியது.

இந்திராகாந்தி தவிர, எலிசபெத் ராணி, அன்னை தெரசா, மேரி கியூரி, மார்கரெட் தாட்சர், ஜோன் ஆஃப் ஆர்க், எமலின் பங்க்ரஸ்ட், ஆங் சான் சூகி, எலனார் ரூஸ்வெல்ட் ஆகியோரையும் சிறந்த பெண்மணிகளாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

கண்களில் லென்சு வைப்பது நல்லதா?

● சு. சரண்யா, ஆண்டிபட்டி.

? கண்களில் 'லென்சு' வைப்பது நல்லதா?

! நல்லதுதான், சரண்யா. கண்களில் பொருத்தப்படும் லென்சு இரு வகைப்படும். ஒன்று, ஒட்டுவில்லை (CONTACT LENS); மற்றொன்று, உள்விழிவில்லை (INTRAOCULAR LENS); ஒட்டுவில்லையைக் கருவிழியில் ஒட்டிக் கொள்ள வேண்டும்; உள்விழி வில்லையைக் கண்ணுக்குள் இயற்கை லென்சு உள்ள இடத்தில், அதற்கு மாற்றாகப் பொருத்திக் கொள்ள



வேண்டும். கிட்டப் பார்வை, தூரப் பார்வை ஆகிய கோளாறுகள் உள்ள நபர்கள் மூக்குக் கண்ணாடி அணிவதற்குப் பதிலாக ஒட்டுவில்லையைப் பொருத்திக் கொள்வது நல்லது. முக்கியமாக, சிறுவர் சிறுமியர், இளைஞர்கள், யுவதிகள், விளையாட்டு வீரர்கள், நடனமணிகள் ஆகியோருக்கு ஒட்டுவில்லை ஒரு வரப்பிரசாதம். முதியோர்கள் கண்புரை (CATARACT) அறுவை சிகிச்சைக்குப் பிறகு மூக்குக் கண்ணாடி அணிவதைத் தவிர்க்க, உள்விழிவில்லையைப் பொருத்திக் கொள்ளலாம். இதன் மூலம் சோடாபுட்டிக் கண்ணாடி அணிவதையும் மூக்குக் கண்ணாடி அணிவதால் உண்டாகின்ற இரட்டைப் பார்வையையும் தவிர்த்து விடலாம். பின்குறிப்பு : உள்விழி வில்லையை மருத்துவர்தான் பொருத்தி விட முடியும்.

● டி. ஆல்வின், ஐரேனிபுரம்.

? நம்மில் சிலர் இடக்கைப் பழக்கம் உள்ளவர்களாக இருக்க என்ன காரணம்?

! நமது மூளை பெருமூளை, சிறு மூளை, முகுளம் என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் பெருமூளை இரண்டு அரைக்கோள வடிவில் உள்ளது. இடப்பக்க அரைக் கோளம் உடலின் வலது பக்க உறுப்புக்களையும், வலது பக்க அரைக் கோளம் உடலின் இடப்பக்க உறுப்புக்களையும் இயக்குகின்றன. பெரும்பாலான மக்களுக்கு இடப்பக்க அரைக் கோளம் சற்று மேலோங்கிச் செயல்படுவதால் அவர்களுக்கு வலப்பக்க உறுப்புகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதனால் வலது கை எந்த வேலையையும் முதலில் செய்கிறது. சிலருக்கு வலப் பக்க அரைக்கோளம் மேலோங்கி செயல்படுவதால் இடதுகைப் பழக்கம் வந்து விடுகிறது. உலகப் புகழ்பெற்ற லியனார்டோ டாவின்சி, மைக்கேல் ஆஞ்சலோ, ரெக்ஸ் ஹாரிஸன், சாப்ளின், ஜார்ஜ் புஷ், ஜெரால்டு ஃபோர்டு, ஜிம்மி கானர்ஸ் முதலியோர் இடதுகைப் பழக்கமுள்ளவர்களே!



டாக்டர் கு. கணேசன்

அன்பு என்ற மாயசக்தி...

வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட காந்திஜிக்கு ஆறு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. உடனே எரவாடா சிறையில் காந்திஜி அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் இந்துக் கைதிகளானாலும் சரி, முஸ்லீம் கைதிகளானாலும் சரி, காந்திஜியிடம் அளவு கடந்த பக்தி கொண்டவர்களாக இருந்ததுடன் காந்திஜி எதைச் சொன்னாலும் தட்டாமல் அதைச் செய்வதற்குக் காத்துக் கொண்டிருந்தனர்.

இதை அறிந்த வெள்ளைக்கார சிறை அதிகாரி காந்திஜிக்குப் பணிவிடை செய்ய, சிறையில் இருந்த கைதிகளை அனுமதிக்க மறுத்து விட்டார். கடைசியில் இந்திய மொழிகள் எதுவுமே தெரியாத ஓர் ஆப்பிரிக்க நீக்ரோ கைதியை காந்திஜிக்குப் பணிவிடை செய்ய அனுப்பி வைத்தார் அந்தச் சிறை அதிகாரி.

இந்த ஆப்பிரிக்கக் கைதி முரட்டுச் சுபாவம் உள்ளவன். இவனைப் பயன்படுத்தினால் சிறைக்குள் காந்திஜியால் எந்த வித அரசியல் வேலையையும் செய்ய முடியாது என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டார் அந்தச் சிறை அதிகாரி.

ஒருநாள், சிறையில், அந்த ஆப்பிரிக்கக் கைதியைத் தேள் ஒன்று கொட்டி விட்டது. தாங்க முடியாத வலியாலும் வேதனையாலும் துடித்தான் அக் கைதி. தேள் கொட்டிய அவனது வலக்கை வீங்க ஆரம்பித்ததுடன் அவன் உடம்பெல்லாம் வியர்க்கவும் ஆரம்பித்து விட்டது.

இதை அறிந்த காந்திஜி உடனடியாக அந்தக் கைதியைக் கூப்பிட்டு தேள் கொட்டிய இடத்தைக் கழுவி சுத்தப்படுத்தினார். அதோடு விட்டு விடாமல் கடுமையான விஷம் என்று கூடப் பார்க்காமல் கடிவாயில் தமது உதடுகளை வைத்து விஷ ரத்தத்தை உறிஞ்சித் துப்ப ஆரம்பித்தார் காந்திஜி.

தொடர்ந்து விஷ ரத்தத்தை உறிஞ்சித் துப்பியதும் அந்தக் கைதியின் முகத்தில் இருந்த வேதனை குறைந்தது. பிறகு வேறு சில களிம்புகளைத் தேள் கொட்டிய இடத்தில் வைத்து ஒரு கட்டு போட்டவுடன் அவனுக்கு வலி முழுவதும் நின்று விட்டது.

ஆப்பிரிக்காவில், ஒரு புழுவை விடக் கேவலமாகக் கொடுமைப்படுத்தப்பட்ட அந்தக் கைதி, தன் வாழ்க்கையிலேயே முதன் முதலாக அன்பு என்ற வார்த்தையின் அர்த்தத்தை உணர்ந்தான். தன்னுடைய வேதனையைக் கூட பகிர்ந்து கொள்ள ஒரு மனிதர் இருக்கிறார் என்பதை நினைத்ததும் அவன் இதயம் துள்ளிக் குதித்தது. நன்றியால் அவன் இமைகள் நனைந்து விட்டன.

அன்பு என்ற மாயசக்தி, இதுவரை அவன் மனத்தில் இருந்த முரட்டுச் சுபாவத்தை அடியோடு மாற்றி விட்டதுடன் இந்த நிகழ்ச்சி நடந்த அந்த நிமிடத்திலிருந்து, காந்திஜியின் தீவிரத் தொண்டனாகவே மாறி விட்டான். காந்திஜி எரவாடா சிறையில் இருந்து விடுதலை ஆகும் வரை அவருக்குப் பணிவிடை செய்ததுடன் காந்திஜியின் கொள்கைகளையும் அப்படியே பின்பற்றத் தொடங்கி சிறைக்குள்ளேயே கைராட்டையால் நூல் நூற்கவும் ஆரம்பித்து விட்டான்!

எந்த முரட்டு மனிதன் காந்திஜிக்கு உதவியாக இருக்க மாட்டான் என்று நினைத்தாரோ, அந்த மனிதன் காந்திஜியின் அன்புள்ளத்தால் அடிமையாகவே மாறி விட்டதைப் பார்த்து சிறை அதிகாரிக்கு அதிர்ச்சியும் வியப்பும் தாங்க முடியவில்லை!

— சு. கண்ணகி, திருப்பத்தூர்.





100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

ஏற்கெனவே மதுரை, இராமநாதபுரம், தேனி, சிவகங்கை மாவட்ட வாசகர்களுக்கான போட்டி நிறைவடைந்து விட்டது. இந்த இதழ் தொடங்கி மூன்று இதழ்களுக்கு வேறு சில மாவட்ட வாசகர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதோடு விரைவில் அனுப்பி வைப்பதிலும் கவனம் செலுத்துங்கள்.

இந்த மாதம் திருச்சி, பெரம்பலூர் கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வாசகர்களுக்கான போட்டி: தாவரங்கள் சம்பந்தப்பட்ட விடுகதைகள் எழுதி அனுப்பவும். விரைவில் மற்ற மாவட்ட வாசகர்களுக்கும் இந்த அரிய வாய்ப்பு கிடைக்கும். காத்திருங்கள்! வாய்ப்பைத் தவற விடாதீர்கள்.

கோகுலம் க்விஸ் முடிவு

நவம்பர் கோகுலம் க்விஸ் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பத்து பேரே சரியான விடைகளை அளித்திருக்கிறார்கள்.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. கே. தமிழ் நிலா, காந்தி கிராமம், கரூர்.
2. ஆர். கிருத்திகா, ஆறாம் வகுப்பு, ராணிப்பேட்டை.
3. தா. விஜய சித்ரா, சங்கரலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்.
4. கே. சபரி கிரிஷ், பத்தாம் வகுப்பு, பெங்களூர்.
5. ஆ. சி. தியாகராஜன், மலேசியா.
6. எஸ்.ஆர். அருண், சிவகிரி.
7. எம். சுரேஷ் குமார், புதூர், திருச்சி.
8. மகேஸ்வரமணி, சோழபுரம்.
9. எஸ். ஸ்ரீகாந்த், நெய்வேலி.
10. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி.


சரியான விடை :

1. 1989 ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்ற திபெத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி தலாய்லாமா.
2. உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இருக்கும் இடம் ஜெனிவா.
3. வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள மிகப் பெரிய ஆறுகள் மிஸிஸிபி, மிசௌரி.
4. தந்தி முறையைக் கண்டுபிடித்தவர் சாமுவேல் மோர்ஸ்.
5. நத்தைக்கு நான்கு உணர்கொம்புகள் உள்ளன.
6. டெல்லி செங்கோட்டையைக் கட்டிய மொகலாய மன்னர் ஷாஜகான்.
7. ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலடி எடுத்து வைத்த ஆண்டு 1969.
8. சுதந்தரச் சிலை அமெரிக்காவில் உள்ளது.
9. கோகோ காயின் விதைப் பகுதி சாக்லேட் செய்யப் பயன்படுகிறது.
10. எந்தக் கடல்வாழ் பிராணி அதிக முட்டைகளை இடும்? சுறா.


பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


வழி கண்டுபிடியுங்கள்!



வரைந்து பழகுங்கள்!








"அந்தக் கடைக்கு எப்படி போகணும்?"

"நிறைய பணம் கொண்டுக்கிட்டுப் போகணும்!"

—ஆந்தியூர் கோவிந்தன்

பிருந்தாவனம்

வண்ணம் தீட்டுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/2000 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

